# ANNAI WOMEN`S COLLEGE

(Arts & Science)

(Affiliated to Bharathidasan University,

Tiruchirappalli)

---

## Department of Tamil

## Course Material

**Subject** : தொல்காப்பியம்

**Class** : I.M.A.TAMIL

**Semester** : II

Scanned with CamScanner

# தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையர் உரை

அலகு 1 :

கிளவியாக்கம்

அலகு 2 :

வேற்றுமையியல், வேற்றுமைமயங்கியல், விளிமரபு

அலகு 3 :

பெயரியல், வினையியல்

அலகு 4 :

இடையியல், உரியியல்

அலகு 5 :

எச்சவியல்

பாடநூல் :

தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையர் உரை

(வாய்ப்புள்ள இடங்களில் மொழியியல் நோக்கில் அறிமுகப்படுத்த வேண்டும்)

**பார்வை நூல்கள் :**

01. முத்துச்சண்முகம் - இக்கால மொழியியல்

02. கு. பரமசிவம், இக்கால மொழியியல் அறிமுகம், அடையாளம், புத்தாநத்தம்.

03. செ.வை. சண்முகம், சொல்லிலக்கணக் கோட்பாடு, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

04. செ.வை. சண்முகம், தொல்காப்பியத் தொடரியல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

Scanned with CamScanner

# தொல்காப்பியம்

**தொல்காப்பியம்** என்பது இன்று கிடைக்கப்பெறும் மிக மூத்த தமிழ் இலக்கணநூலாகும். இது இலக்கிய வடிவிலிருக்கும் ஓர் இலக்கண நூலாகும். இதை எழுதியவர் பெயர் *தொல்காப்பியர்* என்று தொல்காப்பியப் பாயிரம் குறிப்பிடுகிறது. தொல்காப்பியத்தில் இடைச்செருகல்கள் உள்ளதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.[1] பழங்காலத்து நூலாக இருப்பினும், இன்றுவரை தமிழ் இலக்கண விதிகளுக்கு அடிப்படையான நூல் இதுவே.

தொல்காப்பியத்தை முதல்நூலாகக் கொண்டு காலந்தோறும் பல வழிநூல்கள் தோன்றின.

## தொல்காப்பியர் காலம்

தொல்காப்பியத்துக்குப் பாயிரம் தந்துள்ள புலவர் பனம்பாரனார் தொல்காப்பியர் காலத்தவர். அவர் தம் பாயிர உரையில் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்று குறிப்பிடுகிறார். ஐந்திரம் என்பது சமற்கிருத இலக்கணநூல். இது பாணினி எழுதிய வடமொழி இலக்கண நூலுக்குக் காலத்தால் முற்பட்டது. தொல்காப்பியர் காலத்தில் பாணினியம் தோன்றவில்லை. எனவே தொல்காப்பியர் பாணினிக்கு முந்திய நூலான ஐந்திரம் என்னும் நூலையும் அறிந்திருந்தார். தமிழில் இருந்த 'முந்துநூல்'(அகத்தியம்) கண்டிருந்தார். எனவே தொல்காப்பியர் பாணினியின் காலமாகச் சொல்லப்படும் கி.மு. நாலாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்பது தெளிவு.

ஐந்திரம், தொல்காப்பியம் ஆகிய நூல்களைப் பற்றிப் பர்னல் என்பவர் ஒப்பிட்டு ஆராய்ந்தார். இந்திரன் செய்தது ஐந்திரம் என்றனர்.[சான்று தேவை] இந்த இந்திரன் சமணமதத்தைத் தோற்றுவித்த இந்திரன் என இவர் கொண்டார்.[சான்று தேவை] விளைவு, சமணர் காலத்துக்குப் பிற்பட்டவர் தொல்காப்பியர் எனக் காட்டலானார். உண்மையில் ஐந்திரம் என்னும் நூல் ஐந்திரன் என்பவரால் இயற்றப்பட்டது என்பதே பொருத்தமானது. இதன் அடிப்படையில் பார்க்கும்போது பர்னலின் விளக்கம் தொல்காப்பியர் காலத்தைக் கி.மு. நாலாம் நூற்றாண்டுக்கு முன்னதாக்கிவிடும். தோற்றம் என்ற தலைப்பில் சான்றுடன் கூடிய தொல்காப்பியர் காலம் இணைக்கப்பட்டுள்ளது.

செம்மொழி தமிழாய்வு நடு நிறுவனம் தொல்காப்பியர் ஆண்டினை கி.மு 711 என்று பொருத்தியது.

Scanned with CamScanner

தொல்காப்பியர் செய்தது தொல்காப்பியம், தொல்காப்பியம் செய்தவர் தொல்காப்பியர் என்னும் இருவேறு கருத்துகள் அறிஞர்களிடையே நிலவுகின்றன

தொன்மை + காப்பியம் = தொல்காப்பியம்

பழைய தொன்மையான காப்பிய நூல் என்பதாலும் இது "தொல்காப்பியம்" என்றழைக்கப்படுகிறது

## தொல்காப்பியர் செய்தது தொல்காப்பியம்

தொல்காப்பிய நூல் முழுமைக்கும் உரை எழுதிய இளம்பூரணர், தொல்காப்பியர் கூறும் ஆகுபெயர்களில் ஒன்றான 'வினைமுதல் உரைக்கும் கிளவி' என்பதற்குத் 'தொல்காப்பியம்' என்னும் எடுத்துக்காட்டினைத் தந்துள்ளார். (2.3.31) இது தொல்காப்பியர் செய்தது தொல்காப்பியம் என்னும் கருத்தை வெளிப்படுத்துகிறது.

அகத்தியர் செய்தது அகத்தியம். பன்னிருவர் செய்தது பன்னிரு படலம். ஐந்திரன் செய்தது ஐந்திரம். காக்கை பாடினியார் செய்தது காக்கைபாடினியம். பல்காப்பியனார் செய்தது பல்காப்பியம். திருவலர் செய்தது திருவலம். இப்படித் தொல்காப்பியத்துக்கு முந்திய இலக்கண நூலும், தொல்காப்பியத்தை முதல்-நூலாகக் கொண்ட தமிழின் பழமையான இலக்கண நூல்களில் பலவும், பிறவும் ஆசிரியராலேயே பெயர் பெற்றுள்ளன. இந்த வகையில் தொல்காப்பியர் செய்தது தொல்காப்பியம் எனக் கொள்வதே முறைமை.

கபிலர், தொல்கபிலர், பரணர், வன்பரணர் என வேறுபடுத்தப்படும் புலவர்களை நாம் அறிவோம். அதுபோலக் காப்பியனார் என்னும் பெயரில் தொல்காப்பியனார், பல்காப்பியனார், காப்பியாற்றுக் காப்பியனார் என்னும் புலவர்கள் இருந்துவந்ததை வரலாறு காட்டுகிறது.

தொல்காப்பியப் பாயிரம் "புலம் தொகுத்தோன் ... ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றிப் பல்புகழ் நிறுத்த படிமையோன்" என்று கூறுகிறது. இதில் தொல்காப்பியன் புலம்(=இலக்கணம்) தொகுத்தான் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இவற்றை விடுத்துத் தொல்காப்பியம் செய்தவர் தொல்காப்பியர் எனக் கூறுவோர் வரலாற்றை எண்ணிப்பார்க்க வேண்டும்.

## தொல்காப்பியம் செய்தவர் தொல்காப்பியர்

இயம்புவது "இயம்" ஆகும். இயத்துக்குக் காப்புத் (காவல்) தருவது "காப்பியம்". தொன்மையான காப்பியம் ஆதலால் இது தொல்காப்பியம் ஆனது.

Scanned with CamScanner

தொல்காப்பியம் செய்தவ[illegible]ப்பியர் எனப்பட்டார். நன்னூல் செய்த [illegible]ந்தி முனிவரை நாம் நன்னூலார் என வழங்குவது போன்றதே இது.

## தோற்றம்

தொல்காப்பியப் பாயிரம் இவரை: "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றிப் பல்புகழ் நிறைந்த படிமையோன்" என்று குறிப்பிடுகிறது. தொல்காப்பியர் 'புலம்' தொகுத்தார் என்றும் தொல்காப்பியப் பாயிரத்தில் பனம்பாரனார் குறிப்பிடுகிறார். புலம் என்றும் புலன் என்றும் நாம் அறிவுக்கு அடிப்படையாக அமைந்துள்ள நிலைகளங்களைக் குறிப்பிடுகிறோம். அது போல மொழிக்கு அடிப்படையாக அமைந்துள்ள எழுத்து முதலான களங்களைக் காட்டுவது புலம் ஆகும். ஆகவே தொல்காப்பியர் புலம் தொகுத்தார் ஆனார். தொல்காப்பியர் பற்றி வேறு தனிப்பட்ட தகவல்கள் அதிகம் காணப்படவில்லை. தொல்காப்பிய ஆசிரியர் சமணர்[௩] என்று சிலரும் பிராமணர்[௪] என்று சிலரும் குறிப்பிட்டாலும், வேறு சிலர் இது பலரால் பல்வேறு காலங்களில் எழுதப்பெற்ற நூல் என்றே நம்புகின்றனர்.

தொல்காப்பியம் தோன்றிய காலம் பற்றி பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட காலக்கணிப்பு ஏதும் இல்லை. பல்வேறு காலகட்டங்களில் பல ஆய்வாளர்கள் வெவ்வேறு விதங்களில் இதன் காலத்தைக் கணிக்க முயன்றுள்ளார்கள்.

பண்டைக்காலத்தில் பாண்டிய நாட்டில் இருந்து தமிழ் வளர்த்ததாகக் கருதப்படும் மூன்று தமிழ்ச் சங்கங்களில் இடைச் சங்க காலத்தின்[௫] இறுதியில் இந் நூல் எழுதப்பட்டதாகச் சிலர் கருதுகிறார்கள். இதன் அடிப்படையிலும், இறையனார் களவியல் உரை என்னும் நூலில் காணப்படும் மேற்படி சங்கங்கள் செயற்பட்ட கால அளவுகளை அடிப்படையாகக் கொண்டும், தொல்காப்பியம் கி.மு 5000 ஆண்டளவில் ஆக்கப்பட்டது என்று இவர்கள் கணித்தார்கள். எனினும் தற்காலத்தில் பெரும்பாலான ஆய்வாளர்களால் இது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. தெ. பொ. மீனாட்சிசுந்தரம், இலக்குவனார் போன்றவர்கள் இந்நூல் கி.மு 700 ஆம் ஆண்டளவில் ஆக்கப்பட்டதாகக் கருதினார்கள். வேறு சிலர் இதன் காலத்தை கி.மு 500-க்குச் சிறிது முன்பின்னாகக் கணிப்பிட்டார்கள். சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராகப் பணியாற்றிய எஸ். வையாபுரிப் பிள்ளையும் வேறு சில வெளிநாட்டு அறிஞர்களும் தொல்காப்பியத்தின் காலத்தை மேலும் பின் தள்ளி கி.பி 3 ஆம் நூற்றாண்டு என்றனர். தொல்காப்பியம் பல ஆசிரியர்கள் கொண்டது என்போரின் கருத்தோ, கி.மு. 3 ஆம் நூற்றாண்டில்

Scanned with CamScanner

தொடங்கப்பெற்று கி.பி. 5-ஆம் நூற்றாண்டு வரை இந்நூல் எழுதப்பெற்றது என்பதாகும். ஆயினும் மா. இராச மாணிக்கனார் தன் கால ஆராய்ச்சி நூலில் மணி மேகலை எழுதப்பட்ட காலம் கி. பி இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பு என்று பல்வேறு சான்றுகளுடன் எஸ். வையாபுரி பிள்ளையின் கருத்துகளை மறுத்தும் , மா. ராசி மாணிக்கனார் தொல் காப்பியர் காலம் கி.மு 4 ஆம் நூற்றாண்டுக்கு முன்பு என்றும் உறுதியாக கூறுகிறார்.

**தொல்காப்பியர் காலம் :**

சங்க கால புலவர் மாமூலனாரின் காலம் பற்றிய தவறான கணிப்பே கடைச்சங்க காலம் குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. மாமூலனார் கி.மு 4ஆம் நூற்றாண்டில் மகதத்தை ஆண்ட நந்தர்கள் பற்றியும் பிறகு ஆண்ட மௌரியர்களின் தமிழக படையெடுப்பு பற்றியும் கூறியுள்ளார்.கள்ளில் ஆத்தி --ரையனார், ஊன்பொதி பசுங்குடையார் மேலும் 3 புலவர்கள் இப்போரினை தம் இலக்கியங்களில் பதிவு செய்து போரில் வென்றவன் கரிகாலனின் தந்தை இளஞ்சேட் சென்னி என்கின்றனர். இதன் மூலம் திருவள்ளுவர் போன்றோரின் காலம் கி.மு 5 ஆம் நூற்றாண்டிற்கு முற்ப்பட்டது என தெரிகிறது. இதனால் தொல்காப்பியரின் காலம் கி.மு 10 ஆம் நூற்றாண்டிற்கு முற்ப்பட்டது என தெள்ளத்தெளிவாக தெரிய வருகிறது. மேலும் சங்க கால புலவர் கபிலர் அரசன் இருங்கோவேள் பற்றி கூறுகையில்,அவனுடைய முன்னோர்கள் 49 தலைமுறையாக துவரை (துவாரகை) மாநகரை ஆண்டு வந்ததாகவும், அவர்களில் முன்னோன் ஒருவன் கழாத்தலை புலவரை இழிவு படுத்தியதன் காரணமாகவே இருபெரு மாநகரங்கள் (துவரை, வேட்துவாரகை) அழிவடைந்ததாகவும் கூறுகிறார். மாமூலனார் காலத்தின் மூலம் கபிலர் காலம் கி.மு 3 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் கி.மு (280-290).ஒரு தலைமுறைக்கு 27 என கொள்ள, 49×27=1323 ஆக 265+1323=1588 கி.மு 16 ஆம் நூற்றாண்டு அல்லது அதற்கு முற்ப்பட்ட விடயங்களை பற்றியும், மேலும் அக்காலத்தில் கழாத்தலையார் என்ற புலவர் வாழ்ந்தது பற்றியும் கபிலர் கூறுகிறார். இதன் மூலம் தொல்காப்பியரின் காலம் கி.மு 20ஆம் நூற்றாண்டிற்கு முற்ப்பட்டது என தாராளமாக கூறலாம். கபிலர் காலத்திலும் கழாத்தலை என்ற புலவர் வாழந்ததாகவும், அப்புலவரால் பாடப்பட்ட அரசர்களின் பெயர்கள் மூலம் தெரியவருகிறது. வரலாற்றாசிரியர்கள் கி.மு 1500 வாக்கில் துவாரகை கடலாள் கொள்ளப்பட்டதாக கூறுவது கபிலரின் பாடலை 100 சதவீதம் உறுதிபடுத்தும் விதமாக உள்ளது. இதன் மூலம் கபிலரின் காலம் கி.மு 3 ஆம் நூற்றாண்டு என்பதும் நக்கீரர்(கி.மு 3 ஆம் நூற்றாண்டு-கபிலரை விட ஒரு தலைமுறை இளயவர்) என்பவரின் கூற்றின் மூலம் தொல்காப்பியர் இடைச்சங்கத்தில் (கி.மு 5770-கி.மு 2070) பிறந்தவர். ஆக கபிலர் பாடல் மூலம்

Scanned with CamScanner

தொல்காப்பியர் காலம் கி.மு 21 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது. அதாவது இடைச்சங்கத்தில் பிறந்தவர் என துள்ளியமாக தெரிகிறது.காரணம் நக்கீரர் தொல்காப்பியரை இடைச்சங்கத்தில் பிறந்து வாழ்ந்து இறந்ததாகவே குறிப்பிடுகிறார்.இடைச் சங்கம் கி.மு 21 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்பதால் தொல்காப்பியர் கி.மு 2100 கு முன்பே வாழ்ந்திருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது.

## அமைப்பு[

| 'தொல்காப்பியம்' என்ற தமிழிலக்கண நூலினமைப்பு (≃ கி.மு.300) | | |
|---|---|---|
| எழுத்ததிகாரம் | சொல்லதிகாரம் | பொருளதிகாரம் |
| 1.நூலின் மரபு | கிளவியாக்கம் | அகத்திணையியல் |
| 2.மொழி மரபு | வேற்றுமையியல் | புறத்திணையியல் |
| 3.பிறப்பியல் | வேற்றுமை மயங்கியல் | களவியல் |
| 4.புணரியல் | விளிமரபு | கற்பியல் |
| 5.தொகை மரபு | பெயரியல் | பொருளியல் |
| 6.உருபியல் | வினையியல் | மெய்ப்பாட்டியல் |
| 7.உயிர் மயங்கியல் | இடையியல் | உவமையியல் |
| 8.புள்ளிமயங்கியல் | உரியியல் | செய்யுளியல் |
| 9.குற்றியலுகரப் புணரியல் | எச்சவியல் | மரபியல் |

மூல ஓலையுடனான தொல்காப்பிய அமைப்பு

தொல்காப்பியம் 1602 பாக்களால் ஆனது. இதன் உள்ளடக்கம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது எழுத்ததிகாரம் தனிமொழியிலும், புணர்மொழியிலும் உள்ள எழுத்துகளைப் பற்றிக் கூறுகிறது. இரண்டாவது சொல்லதிகாரம் மொழித்தொடர் (syntax) அமையும் பாங்கைச் சொல்கிறது. மூன்றாவது பொருளதிகாரம் எழுதப்படும் நூலிலுள்ள வாழ்க்கைப் பொருளையும், அப்பொருள் சொல்லப்பட்டுள்ள யாப்பு, அணி முதலான பாங்குகளையும், தமிழ்மரபையும் விளக்குகிறது.

# சொல்லதிகாரம்

## கிளவியாக்கம்

1. வேற்றுமை இயல்
2. வேற்றுமை மயங்கியல்
3. விளி மரபு
4. பெயரியல்
5. வினை இயல்
6. இடையியல்
7. உரியியல்
8. எச்சவியல்

Scanned with CamScanner

## ***சொல்லதிகாரத்தில் சொல்லப்படும் செய்திகள்***

சொல்லதிகாரத்தில் 9 இயல்கள் உள்ளன.

முதலாவது கிளவியாக்கம் என்னும் இயலில் தமிழ்ச் சொற்றொடர் வாக்கியமாக அமையும் பாங்கு கூறப்படுகிறது.

இரண்டாவது வேற்றுமையியலில் வேற்றுமை உருபுகள் இன்னின்ன கருத்துக்களைப் புலப்படுத்திக்கொண்டு சொற்றொடராக அமையும் என்பது விளக்கப்படுகிறது.

மூன்றாவது வேற்றுமை மயங்கியலில் 2, 3, 4, 5, 6, 7 வேற்றுமை உருபுகள் உருவில் திரிந்தும், பொருளில் வேறுபட்டும் நிற்கும் இடங்கள் எவை என விளக்கப்படுகிறது.

நான்காவது விளிமரபு என்னும் இயலில் 8-ஆம் வேற்றுமையாக எந்தப் பெயர்ச்சொல் எவ்வாறு மாற்றம் கொள்ளும் என்பது விளக்கப்படுகிறது.

ஐந்தாவது பெயரியலில் பெயர்ச்சொற்கள் தோன்றுமாறும், அவை ஒருமை, பன்மை என்னும் எண்ணைப் புலப்படுத்தும்போதும், தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் இடத்தைப் புலப்படுத்தும்போதும் எவ்வாறு அமையும் என்பது விளக்கப்படுகிறது.

ஆறாவது வினையியலில் வினைச்சொற்கள் காலம் காட்டும் பாங்கும், ஐம்பால் மூவிடங்களில் ஈறுகள் கொள்ளும் பாங்கும், எச்சங்களாகத் திரியும் பாங்கும் விளக்கப்படுகின்றன.

ஏழாவது இடையியலில் பெயரையும் வினையையும் கூட்டுவிக்க இடையில் வந்தமையும் இடைச்சொற்கள் எடுத்துக்காட்டப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

எட்டாவது உரியியலில் பெயருக்கும், வினைக்கும் உரிமை பூண்ட உரிச்சொற்கள் எடுத்துக் காட்டப்பட்டு அவை உணர்த்தும் பொருள்கள் இவை என்பதும் சொல்லப்படுகிறது.

ஒன்பதாவது எச்சவியலில்

- இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் பாகுபாடுகளும்,
- பெயரெச்சம், வினையெச்சம், சொல்லெச்சம் பிரிநிலையெச்சம், எதிர்மறை எச்சம், ஒழியிசை எச்சம், உம்மை எச்சம், என- என்னும் எச்சம் முதலானவை பற்றிய விளக்கங்களும்,
- ஈ, தா, கொடு ஆகிய சொற்களின் சிறப்புப்பொருள்களும்,
- இடக்கரடக்கல், குறைசொற்கிளவி பற்றிய விளக்கங்களும்,
- காலமயக்கம், ஒருமை-பன்மை மயக்கம் பற்றிய பல்வகை மொழிக்கூறுகளும்

Scanned with CamScanner

# Have You Made Full Use of the OCR Feature?

Make a scan,enhance it and save it.Are these all the features you know about CamScanner?If so,you have missed too many cool experiences. CamScanner offers you lots of features rather than scanning.What we are sharing today is the OCR(Optical Character Recognition)feature.

## What can you do with OCR feature?

1.Searching

What can you do if you want to search for a document but just can't re-member the names of some docs?Use this feature to recognize all the texts on your scans.Next time you just need to enter some key words in the search box and all the documents within the words will be found.

2.Text extraction

Just purchase the one-time paid version and you can enjoy the text extrac-tion for lifetime!Ever want to edit some texts on a paper document or a PDF file?Import it into CamScanner and all texts can be extracted as.txt file after OCR!

## Why wait? Follow the steps to start using OCR!

1.Sign in to CamScanner to sync all your docs->All texts will be auto rec-ognized after syncing.

2.If you don't want to sign in,you can open one single page of any doc-> Tap the Recognize button->All recognized texts will be shown in a dialog box->Tap Share to export the texts.

Scanned with CamScanner

விளக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கு இடையே நிரல்நிறை, சுண்ணம், அடிமறி-மாற்று, மொழிமாற்று ஆகிய செய்யுளின் பொருள்கோள் வகை புகுந்துள்ளது விந்தையே.

மொத்தத்தில் சொல்லதிகாரம் மொழியின் வாக்கிய அமைப்பைக் (Syntax) கூறுகிறது எனலாம்.

எழுத்து சொல் பொருள் என்று மூன்று பகுதிகளைக் கொண்டது. முதலாவது எழுத்ததிகாரம் தனிமொழியிலும், புணர்மொழியிலும் உள்ள எழுத்துகளைப் பற்றிக் கூறுகிறது. இரண்டாவது சொல்லதிகாரம் மொழித்தொடர் அமையும் பாங்கைச் சொல்கிறது. மூன்றாவது பொருளதிகாரம் எழுதப்படும் நூலிலுள்ள வாழ்க்கைப் பொருளையும், அப்பொருள் சொல்லப்பட்டுள்ள யாப்பு, அணி முதலான பாங்குகளையும், தமிழ்மரபையும் விளக்குகிறது.

ஒவ்வொரு பகுதியிலும் 9 இயல்கள் உள்ளன. அவற்றில் இரண்டாவது சொல்லதிகாரத்தில் முதலாவது இயல் **கிளவியாக்கம்**. இந்த இயலில் சொல்லப்படும் செய்திகளை நூற்பா வரிசை எண்ணுடன் இங்குக் காணலாம்.

**பொருளடக்கம்**

- 1திணை, பால், எண்
- 2வினா-விடை
- 3வழக்கு
- 4செல், வா, தா, கொடு
- 5வினா
- 6சுட்டு முதலானவை
- 7கருவிநூல்

**அல்லது இல்லைதிணை, பால், எண்மக்களைக் குறிக்கும் சொல் உயர்திணை. மக்கள் அல்லாத பிறவற்றைக் குறிக்கும் சொல் அஃறிணை. இப்படித் திணை**

---

- ஆணைக் குறிக்கும் சொல் ஆண்பால். பெண்ணைக் குறிக்கும் சொல் பெண்பால், பலரைக் குறிக்கும் சொல் பலர்பால். இப்படி உயர்திணையில் 3 பால். -2
- ஒரு பொருளைக் குறிக்கும் சொல் ஒன்றன்பால். பல பொருளைக் குறிக்கும் சொல் பலவின்பால். இப்படி அஃறிணையில் 2 பால். -3
- பேடி என்னும் சொல்லுக்குப் பால் இல்லை. அதன் தொடர்மொழி பாலை உணர்த்தும்

  பேடி வந்தான், பேடி வந்தாள், பேடி வந்தார் -4

Scanned with CamScanner

தெய்வத்தைச் சுட்டும் பெயருக்கும் பால் இல்லை.

இறைவன் வந்தான், திருமகள் வந்தாள், கடவுள் வந்தார், இறை என்று வைக்கப்படும் -4

ன்-ஒற்று ஆண்பாலைக் குறிக்கும்

உண்டான், உண்பான் -5

- ள்-ஒற்று பெண்பாலைக் குறிக்கும்

உண்டாள், உண்பாள் -6

- ர்-ஒற்று, ப-எழுத்து, மார்-கிளவி ஆகிய மூன்றும் பலர்பாலைக் குறிக்கும்

உண்டார், உண்ப, கொண்மார் வந்தார் (கொண்மார் – முற்றெச்சம்) -7

து, டு, று –ல் முடியும் குற்றியலுகரம் ஒன்றன்பாலை உணர்த்தும்

வந்தது, 'குருதிப் பூவின் குலைக் காந்தட்டு(ஏ)' – குறுந்தொகை 1, ஓடிற்று -8

அ, ஆ, வ –முடிபு பலவின்பாலை உணர்த்தும்

சென்றன, செல்லா (எதிர்மறை வினைமுற்று), உண்குவ (குறிப்பு வினைமுற்று) -9

ன், ள், ர், ப, மார், கு, டு, று, அ, ஆ, வ – ஆகிய 11 எழுத்துக்களும் இரண்டு திணைகளிலும் உள்ள ஐந்து பாலை வினைமுற்றில் உணர்த்தும் -10

வினையில் தோன்றும் பாலறி கிளவியும், பெயரில் தோன்றும் பாலறி கிளவியும் மாறிவந்து மயங்கக் கூடாது

அவன் வந்தான், அவள் வந்தாள், அவர் வந்தார், அது வந்தது, அவை வந்தன என வரும். இவற்றில் மயக்கம் இல்லை. -11

- பேடி என்னும் சொல் பெண்பாலை உணர்த்தும். என்றாலும் அது ஆண்பாலைச் சுட்டி மயங்கும்.

பேடி வந்தான் -12

## வினா-விடைவினாவுக்கு ஏற்ற விடை நேரடியாகச் சொல்லவேண்டும்

உன் கோ நாடு யாது? தமிழ்நாடு – இது வழா விடை.

கருவூருக்கு வழி யாது? என் கையில் உள்ளது பூ – இது வழு விடை -13

Scanned with CamScanner

- வினாவுக்கு வினா விடை

சாத்தா உண்ணாயோ? – உண்ணேனோ? – இது சரி -14

- விடையைக் குறிப்பு-மொழியாலும் உணர்த்தலாம்.

உறையூருக்குச் செல்லாயோ? – கால் வலிக்கிறது, வழிப்பறி நிகழும் -15

- உறழ் விடை

கொற்றி கூந்தல் நல்லதா, சாத்தி கூந்தல் நல்லதா? – கொற்றி கூந்தலினும் சாத்தி கூந்தல் நல்லது. சாத்தி கூந்தலினும் கொற்றி கூந்தல் நல்லது – இப்படி விடை சொல்லுவது சரி -16

**வழக்கு**

**தகுதி வழக்கு**

---

செத்தாரைத் துஞ்சினார் எனல்.

சுடுகாட்டை நன்காடு எனல்

- இடக்கரடக்கல்

கால் கழுவி வருகிறேன் (மலம்),

கண் கழுவி வருகிறேன் (பீளை)

- மரூஉ

சோழநாட்டைச் சோணாடு எனல் -17

- இனச்சுட்டு இல்லாப் பண்புகொள் பெயர்க்கொடை

'மாக்கடல் நிவந்து எழுதரு செஞ்ஞாயிற்றுக் கவினினை மாதோ' (புறம் 4),

'வெண்கோட்டு யானை சோணை படியும்' (குறுந்தொகை 75) -18

- இயற்கைப் பொருள்களை அதன் இயல்புத் தன்மையுடன் சொல்லவேண்டும்

நிலம் வலிது, நீர் தண்ணிது -19

- செயற்கைப் பொருள்களை அதன் ஆக்கமொடு சொல்லவேண்டும்

மயிர் நல்லவாயின, பயிர் நல்லவாயின -20

- ஆக்கத்துக்குக் காரணம் உண்டு

Scanned with CamScanner

எண்ணெய் பூசியதால் மயிர் நல்லவாயின -21

- ஆக்கம் காரணம் இல்லாமலும் சொல்லப்படும்

மயிர் நல்லவாயின -22

- பால் மயக்குற்ற ஐயக்கிளவி பயனிலையில் பன்மை கொள்ளும்

ஒருவன் கொல்லோ, ஒருத்தி கொல்லோ, தோன்றுபவர் -23
ஒருவன் கொல்லோ, ஒருத்தி கொல்லோ தோன்றும் அவ்வுரு – என்றும் கூறலாம் -24
ஒன்று கொல்லோ, பல கொல்லோ வயலில் புகுந்த மாடு – என அஃறிணையில் கூறலாம் -24
ஐயம் இல்லாவிட்டால் ஒருவன் அல்லன் ஒருத்தி எனக் கூறலாம் -25

- அடைமொழி, சினைமொழி, முதன்மொழி ஆகியவை இந்தத் தொடர்வரிசையில் அமையும்

பெருந்தோள், சிறுமருங்குல், பேரமர்கட் பேதை -26

- வழக்கில் வரும் பன்மைக்கு இலக்கணம் சொல்ல முடியாது - 27

ஒருவனை அவர் வந்தார் எனல்
ஒன்றனைக் கருடன் வந்தார் எனல்
பசுவை என்தாய் வந்தார் எனல்
ஒருத்தியை என் பாவை வந்தது எனல்

## செல், வா, தா, கொடு[தொகு]

- செல், வா, தா, கொடு – சொற்கள் மூவிடத்தும் வரும் -28

சென்றேன், சென்றாய், சென்றார்
வந்தேன், வந்தாய், வந்தார்
தந்தேன், தந்தாய், தந்தார்
கொடுத்தேன், கொடுத்தாய், கொடுத்தார்

– இவை இக்கால வழக்கு)

எனக்கு வரும் பொருள், உனக்கு வரும் பொருள், அவருக்குச் செல்லும் பொருள், அவருக்குக் கொடுக்கும் பொருள் -29, 30

Scanned with CamScanner

எனக்குத் தரும் பொருள், உனக்குத் தரும் பொருள், அவருக்குச் செல்லும் பொருள், அவருக்குக் கொடுக்கும் பொருள் -29, 30

**வினா**

**யாது, எவன் – என்பவை அறியாததை அறிய வினவப்படும் -31**

- யாது – அறிந்ததில் ஐயம் தீர்க்கவும் வினவப்படும் -32

கண்களில் யாது மங்கிற்று?

- எண்ணிக்கையில் உம்மை வரும்

கால் இரண்டும் வலிக்கிறது -33

- மன்னாப்பொருள் என்பது இருப்பிடம் இல்லாத பொருள். இதற்கும் உம் வரும்

பவளக்கோட்டு நீலயானை சாதவாகனன் (இந்திரன்) கோயிலுள்ளும் இல்லை. -34

- பயறு உளதோ என்றால் உழுந்து அல்லது இல்லை என வணிகன் கூறலாம் -35
- உழுத்தம்பருப்பு அல்லது இல்லை என வேறு பருப்பு இல்லாமையைக் கூறலாம் -36
- பயறு அல்லது மிளகு இல்லை எனலாம். -37

**சுட்டு முதலானவை**

**சுட்டுச்சொல் வழிமொழிந்து வரும்**

கொற்றன் வந்தான், இவற்குச் சோறு கொடுக்க! -38

- செய்யுளில் சுட்டுச்சொல் முன்னரும் வரும். -39
- அதனால் என்னும் சொல்லும் பின்னர்தான் வரும் -40

கந்தன் நல்லவன் அதனால் அவனை மணந்துகொள்க!

- சிறப்புப் பெயரும் முதலில்தான் வரும் -41

சோழன் மணக்கிள்ளி

- சிறப்புப் பெயர் பலவாகவும் வரும் -42

ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான்.

Scanned with CamScanner

- தன்மைச்சொல்லோடு அஃறிணைச் சொல்லும் வரும் -43

யானும் என் எஃகமும் சாரும்.

- ஒருவன், ஒருத்தி ஆகியவை ஒருமை -44
- வியங்கோளில் திணைவிரவுப் பெயர்கள் சேர்ந்து வரும் -45

ஆனும் ஆயனும் செல்க!

- யாழ் மீட்டினார், குழல் ஊதினார், பறை முழக்கினார் என வேறு-வினை தருக -46
- யாழும், குழலும், பறையும் இயம்பினார் எனப் பொதுவினை தருக -47
- இரட்டைக்கிளவி பிரிந்து இசைக்காது -48

பயிர் கருகருத்தது (கரும்பச்சை ஏறியது), நெஞ்சம் கறுகறுத்தது (பயந்தது), கண் கறுக்கறுத்தது (சினம் காட்டியது)

- ஒருபெயர்ப் பொதுச்சொல் -49

பார்ப்பனச்சேரி (சேரி = சேருமிடம்), கமுகந்தோட்டம், ஒடுவங்காடு (ஒடுமரம் மிகுதியாக உள்ள காடு), காரைக்காடு (காரைமுள்-செடி மிகுதியாக உள்ள காடு)

- பிரிசொல் -50

வடுகரசர் மக்கள் ஆயிரவர் பொருதார் (இங்கு மக்கள் என்பது பெண்மக்களைப் பிரித்து ஒதுக்கியது), ::பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிலின் கீழ் நால்வர் மக்கள் இருந்தனர் (இங்கு மக்கள் என்பது ஆண்மக்களைப் பிரித்து ஒதுக்கியது) அரசன் ஆயிரம் யானை உடையன் (இதில் யானை என்பது பிடிகளைப் பிரித்து ஒதுக்கியது), நம்பி நூறு எருமை உடையன் (இதில் எருமை என்பது எருமைக்கடாக்களைப் பிரித்து ஒதுக்கியது)

- இருதிணைப் பெயர்களைச் சேர்த்து எண்ணினால் அஃறிணை முடிபு தரவேண்டும். -51

'வடுகர், அருவாளர், வான் கருநாடர், சுடுகாடு, பேய், எருமை என்றிவை ஆறும் குறுகார் அறிவுடையார்'

'பாணன் பறையன் துடியன் கடம்பன் என்று அந்நான்கு அல்லது குடியும் இல்லை' (புறம் 325)

Scanned with CamScanner

- பலபொருள் ஒருசொல் இரண்டு வகை -52, 53, 54, 55

1.வினை-வேறுபடும் பலபொருள் ஒருசொல்

மா பூத்தது (மாமரம்), மா ஓடிற்று (மான்), மாவும் மருதும் ஓங்கின (மாமரம்), மாவும் மரையும் மேய்ந்தன (மான்)

2.வினை-வேறுபடா பலபொருள் ஒருசொல்

மா வீழ்ந்தது (மாமரம், மான்)

- தெரித்துமொழி கிளவி -56

மழைநீர் கல்லில் பட்டுத் தெரிப்பது போலத் தெரித்து விடை சொல்வது தெரித்துமொழி-கிளவி எனப்படும். ::படிப்பவன் ஒருவனைப் பார்த்து மற்றொருவன் “படிக்கிறீர்” என்றால், “திருக்குறள் படிக்கிறேன்” எனக் கூறுவது ஒருவகைத் தெரித்துமொழி கிளவி.

- முன்னத்தின் உணரும் கிளவி என்று 18 சொற்களை எடுத்துக்காட்டி பிறவும் உள என்கிறார் தொல்காப்பியர் (அவை இங்கு அகரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன) -57,

(காவிதி)-சிறப்பு, அடிமை, அரசு (வேந்து முதலானவை), ஆண்மை, இளமை, உறுப்பின் கிளவி (குருடு, செவிடு, முடம் – போன்றவை), காதல், குடிமை, குழவி, குழு, செறல், தன்மை திரிபெயர் (பேடி, மடமை - போன்றவை, பெண்மை, மகவு, மூப்பு, வன்மை, விருந்து, விறல்

இவை உயர்திணையாகிய மக்களிடம் நிலவுபவை என்றாலும் அஃறிணை முடிவு கொள்ளும்,

விருந்து வந்தது, குழு கூடிற்று, இளமை இனிது, அடிமை தீது – என்பதுபோல் வரும்.

விருந்து வந்தார், அடிமை தொழுதான் – என்பது போலவும் வரும் -59

பால்பிரிந்து இசையாக் கிளவி -58 உயர்திணையாக வரும்போதும் பால்பிரிந்து இசையாக்கிளவி என்று தொல்காப்பியர் 10 சொற்களை வரையறுக்கிறார். (அவை இங்கு அகர வரிசையில் தரப்படுகின்றன)

உடம்பு (ஆண் உடம்பு, பெண் உடம்பு, பலர் உடம்பு, மான் உடம்பு, யானைகள் உடம்பு), உயிர், உலகம், காலம், சொல், ஞாயிறு, திங்கள், பால்வரைத்தெய்வம், பூதம் (நிலம், நீர், தீ, வளி, விண்), வினை (செய்தான், செய்தாள், செய்தார், செய்த்து, செய்தன என பொருத்திக்கொள்ளலாம்.)

Scanned with CamScanner

இந்தச் சொற்களை எந்தப் பாலோடும் இணைத்துக்கொள்ளலாம்.
என்றாலும் அஃறிணை முடிபே கொள்ளும்.
எனினும் காலன் என்பது போன்ற சொல்லும் அமையும் -60

- இனம் செப்பல் -61
  மேலைச்சேரி வென்றது என்றால், கீழைச்சேரி தோற்றது என்பது இனம் செப்பல்.

- கண், தோள், முலை முதலானவற்றைக் பன்மையால் கூறவேண்டியதில்லை. -62 \ கண் மலர்ந்தது, தோள் உயர்ந்தது, முலை ஊறிற்று என்றாலே போதும்.
-

## தொல்காப்பியம் வேற்றுமையியல் செய்திகள்

---

**பொருளடக்கம்**


- 1தொல்காப்பியத்தில் வேற்றுமை விளக்கம்
- 2தொல்காப்பியர் செய்த புதுமை
- 3எட்டு வேற்றுமைகள்
- 4முதல் வேற்றுமை எனப்படும் எழுவாய் வேற்றுமை
- 5இரண்டாவது ஐ-வேற்றுமை
- 6மூன்றாவது ஒடு-வேற்றுமை
- 7நான்காவது கு-வேற்றுமை
- 8ஐந்தாவது இன்-வேற்றுமை
- 9ஆறாவது அது-வேற்றுமை
- 10ஏழாவது கண்-வேற்றுமை
- 11எட்டாம் வேற்றுமை விளி
- 12இவற்றையும் காண்க
- 13கருவிநூல்


## தொல்காப்பியத்தில் வேற்றுமை விளக்கம்]

---

பெயர்ச்சொல்லோடு வேற்றுமையும் case, வினைச்சொல்லோடு காலமும் tense இயைந்து வருவது தமிழ் மொழியின் மரபு.

வேற்றுமை வரும் செய்திகளைத் தொல்காப்பியர் 4 இயல்களில் குறிப்பிடுகிறார்.

முதலாவது எழுத்ததிகாரம் நான்காவது புணரியலில் வேற்றுமை உருபு புணரும் பாங்கு கூறப்பட்டுள்ளது. இவையிவை வேற்றுமை உருபுகள், இவை பெயர்ச்சொல்லைத் தொடர்ந்து வரும், இவை சாரியை

Scanned with CamScanner

இல்லாமல் எவ்வாறு புணரும், சாரியை பெற்று எவ்வாறு புணரும் என்னும் செய்திகள் இதில் சொல்லப்பட்டுள்ளன.

சொல்லதிகாரத்தில் உள்ள 9 இயல்களில் வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய 3 இயல்கள் வேற்றுமை பற்றிய செய்திகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த மூன்றில், வேற்றுமையியலில் வேற்றுமை 8 வகைப்படும், அவை ஒவ்வொன்றும் இன்னின்ன பொருளை உணர்த்தும், இன்னின்ன வேற்றுமைகள் இன்னின்ன பொருளுடைய பயனிலைகளைக் கொள்ளும் என்னும் செய்திகள் சொல்லப்படுகின்றன.

இந்த இயலில் சொல்லப்பட்டுள்ள செய்திகள் நூற்பா வரிசை-எண் குறியீட்டுடன் இங்குத் தொகுக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டுகள் பெரும்பாலும் தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணரைத் தழுவியவை.

## தொல்காப்பியர் செய்த புதுமை

முன்னோர் வேற்றுமை 7 என்றனர் -1
பெயர் விளிக்கப்படுவதைச் சேர்க்கும்போது 8 ஆகிறது -2

## எட்டு வேற்றுமைகள்

1.பெயர், 2.ஐ, 3.ஒடு, 4.கு, 5.இன், 6.அது, 7.கண், 8.விளி ஆகியவை இவற்றின் ஈறுகள் -3
புணரியலில் பெயர்-வேற்றுமை, விளி-வேற்றுமை இரண்டையும் விடுத்து உருபு கொள்ளும் 6 வேற்றுமைகள் சுட்டப்பட்டுப் புணரும் பாங்கு கூறப்பட்டுள்ளது.

## முதல் வேற்றுமை எனப்படும் எழுவாய் வேற்றுமை

முதல்-வேற்றுமையில் பெயர் தான் தோன்றிய நிலையிலேயே இருக்கும். -4

பெயர்ப்பயனிலை -5

பொருண்மை சுட்டல் \ ஆ உண்டு
வியங்கொள வருதல் \ ஆ செல்க
வினைநிலை உரைத்தல் \ ஆ கிடந்தது
வினாவிற்கு ஏற்றல் \ ஆ எவன் (=எங்கே)
பண்பு கொள வருதல் \ ஆ கரிது
பெயர் கொள வருதல் \ ஆ பல

Scanned with CamScanner

பெயரினாகிய தொகையும் இந்தப்
பயனிலைகளிக் கொள்ளும் -6

யானைக்கோடு உண்டு
யானைக்கோடு செல்க
யானைக்கோடு வீழ்ந்தது
யானைக்கோடு யாது
யானைக்கோடு வெளிது
யானைக்கோடு பத்து
கொல்யானை உண்டு
கொல்யானை செல்க
கொல்யானை வீழ்ந்தது
கொல்யானை யாது
கொல்யானை வெளிது
கொல்யானை பத்து

பெயர் தோன்றிய நிலையில் மாற்றம் இல்லை -7

இந்தப் பெயர் பிற வேற்றுமை இறுதிகளுக்கு முதலாக அமையும் -8

பெயர்நிலைக்கிளவி காலம் காட்டாது -9

உண்டல், தின்றல்

## இரண்டாவது ஐ-வேற்றுமை

வினைமுற்று, வினைக்குறிப்பு எனப் பயனிலை இருவகைப்படும்.

இரண்டாம் வேற்றுமை இந்த இரண்டினுள் யாதானும் ஒன்றைக் கொள்ளும். -10

மரத்தைக் குறைத்தான், குழையை உடையன்

இரண்டாம் வேற்றுமை தழுவும் வினைகள்:

காப்பு – ஊரைக் காக்கும்
ஒப்பு – கிளியை ஓப்பும்
ஊர்தி – யானையை ஊரும்
இழை – எயிலை இழைக்கும் (கட்டும்)
ஒப்பு – தாயை ஒக்கும்
புகழ் – ஊரைப் புகழும்
பழி – நாட்டைப் பழிக்கும்
பெறல் – ஊரைப் பெறும்
இழவு – ஊரை இழக்கும்

Scanned with CamScanner

காதல் – மனைவியைக் காதலிக்கும்

வெகுளி – மாற்றானை வெகுளும்

செறல் – ஊரைச் செறும் (திட்டும்)

உவப்பு – தாயை உவக்கும்

கற்பு – நூலைக் கற்கும்

அறுத்தல் – ஞாணை அறுக்கும்

குறைத்தல் – மரத்தைக் குறைக்கும்

தொகுத்தல் – நெல்லைத் தொகுக்கும்

பிரித்தல் – வேலியைப் பிரிக்கும்

நிறுத்தல் – பொன்னை நிறுக்கும்

அளவு – அரிசியை அளக்கும்

எண் – பழத்தை எண்ணும்

ஆக்கல் – ஊரை யாக்கும் (ஒன்றுபடுத்தும்)

சார்தல் – வாய்க்காலைச் சாரும்

செலவு – நெறியைச் செல்லும்

கன்றல் – சூதினைக் கன்றும் (விரும்பும்)

நோக்கல் – செய்யை நோக்கும் (செய் = வயல்)

அஞ்சல் – கள்வரை அஞ்சும்

சிதைப்பு – நாட்டைச் சிதைக்கும்

விரலை முடக்கும்,

**நாவினை வளைக்கு தழுவும் -11**

## மூன்றாவது ஒடு-வேற்றுமை

நாயால் கோட்பட்டான் – வினைமுதலைத் தருவியது

வாளால் எறிந்தான் – கருவியைத் தழுவியது

அதனின் இயறல் – தச்சனால் செய்யப்பட்டது

அதன் தகு கிளவி – வாயால் தக்கது வாய்ச்சி (வாய்ச்சி = வாய்மை)

அதன் வினைப்படுதல் – நாயால் கோட்பட்டான்

அதனின் ஆதல் – வாணிகத்தால் ஆயினான்

அதனிற் கோடல் – காணத்தால் அரிசி கொண்டான் (காணம் = பணம்)

அதனொடு மயங்கல் – பொறியொடு கலந்த கடலை

Scanned with CamScanner

அதனோடு இயைந்த ஒருவினைக் கிளவி – சாத்தனொடு வந்தான் கொற்றன்.

அதனோடு இயைந்த வேறுவினைக் கிளவி – பகையொடு பொருத பாண்டியன்

அதனோடு இயைந்த ஒப்பல் கிளவி – முத்தொடு முழாக் கோப்பதா?

## -நான்காவது கு-வேற்றுமை

அதற்கு வினை உடைமை – கரும்புக்கு வேலி

அதற்கு உடம்படுதல் – சாத்தற்கு மகளுடம்பட்டார் சான்றோர்

அதற்குப் படுபொருள் – சாத்தற்குப் படுபொருள் கொற்றன்

(படுதல் = ஒத்துப்போதல்)

அதுவாகு கிளவி – தாலிக்குப் பொன்

அதற்கு யாப்புடைமை – கைக்கு யாப்புடையது கடகம்

அதன்பொருட்டு ஆதல் – கூலிக்கு வேலை

நட்பு – நாய்க்கு நட்பு

பகை – எலிக்குப் பகை பூனை

காதல் – தாய்க்குக் காதலன்

சிறப்பு – அறத்திற்குச் சிறப்பு அன்பு

பண்ணுக்குத் தக்கது பாடல்.

**கண்ணுக்குத் தக்கது கண்ணோட்டம்.)**

## ஐந்தாவது இன்-வேற்றுமை

இதனின் இற்று இது (இப்பொருளின் இத்தன்மைத்து இப்பொருள்) என்பதனைப் பயப்ப வரும் -13

(ஐந்தாம் வேற்றுமை பொரூஉ, நீக்கம், எல்லை, ஏது என நான்கு பொருளை உடையது.

தலைமை பற்றித் தொல்காப்பியர் பொரூஉப்-பொருளை மட்டும் கூறினார் என்கிறார் இளம்பூரணர்)

வண்ணம் - காக்கையிற் கரிது களம்பழம் (=களாப்பழம்)

(காக்கையைக் காட்டிலும்)

வடிவு – இதனின் வட்டம் இது

Scanned with CamScanner

அளவு – இதனின் நெடிது இது

சுவை – இதனின் தீவிது(இனிப்பானது) இது

தண்மை – இதனின் தண்ணிது இது

வெம்மை – இதனின் வெய்யது இது

அச்சம் – கள்ளரின் அச்சம் (கள்ளரைக் காட்டிலும்)

நன்மை – இதனின் நன்று இது

தீமை – இதனின் தீது இது

சிறுமை – இதனின் சிறிது இது

பெருமை – இதனின் பெரிது இது

வன்மை – இதனின் வலிது இது

மென்மை – இதனின் மெல்லிது இது

கடுமை – இதனின் கடிது இது

முதுமை – இவனின் மூத்தான் இவன்

இளமை – இவனின் இளையான் இவன்

சிறத்தல் – இவனின் சிறந்தான் இவன்

இழித்தல் – இவனின் இழிந்தான் இவன்

புதுமை – இவனின் புதியன் இவன்

பழமை – இவனின் பழையன் இவன்

ஆக்கம் – இவனின் ஆயினான் இவன்

இன்மை – இவனின் இலன் இவன்

உடைமை – இவனின் உடையன் இவன்

நாற்றம் – இதனின் நாறும் இது

தீர்தல் – ஊரின் தீர்ந்தான் (ஊரிலிருந்து போய்விட்டான்) – இது நீக்கப் பொருள்

பன்மை – இவரின் பலர் இவர்

சின்மை – இவரின் சிலர் இவர்

பற்றுவிடுதல் – ஊரின் பற்றுவிட்டான் (ஊரிலிருந்து விலகினான்) – நீக்கப்பொருள்

எல்லை – கருவூரின் கிழக்கு

ஏது – முயற்சியிற் பிறத்தலின் ஒலி நிலையாது

Scanned with CamScanner

தட்டுப்புடைக்கண் வந்தான் – வினைசெய்யுமிடம் (நெல்லைத் தட்டித் தூற்றிப் புடைக்கும் களத்தின்கண் வந்தான்)
மாடத்துக்கண் வந்தான் – நிலம்
மாரியுள் வந்தான் – காலம்

கண் – ஊர்க்கண் இருந்தான்
கால் – ஊர்க்கால் இருந்தான் (ஊரின் நுழைவாயில்)
புறம் – ஊர்ப்புறத்து இருந்தான்
அகம் – ஊரகத்து இருந்தான்
உள் – ஊருள் இருந்தான்
உழை – சான்றோருழைச் சென்றான்
கீழ் – மாடத்தின்கீழ் இருந்தான்
மேல் – மாடத்தின் மேல் இருந்தான்
பின் – ஏர்ப்பின் சென்றான்
சார் – காட்டுச்சார் ஓடும்
அயல் – ஊரயல் இருந்தான்
புடை – ஊர்ப்புடை இருந்தான்
தே – வடக்கண் வேங்கடம், தெற்கண் குமரி (தே = திசை)
முன் – தேர்முன் சென்றான்
இடை – சான்றோரிடை இருந்தான்
கடை - கோயிற்கடைச் சென்றான்
தலை – தந்தைதலைச் சென்றான்
வலம் – கைவலத்து உள்ளது கொடுக்கும்
இடம் - கையிடத்து இருந்தான் (கை = பக்கம்)

தேஎம் - கிழவோள் தேஎத்து

Scanned with CamScanner

வாணிகத்தான் ஆயினான் (மூன்றாம் வேற்றுமை), வாணிகத்தின் ஆயினான் (ஐந்தாம் வேற்றுமை) – ஆக்கச் சொல் இவ்வாறு 3, 5ல் மயங்கும் -9-

வான் நோக்கி வாழும் = வானை நோக்கி வாழும் (இரண்டாம் வேற்றுமை) = வானின் உதவிக்காக நோக்கி வாழும் (ஏது-பொருள்) -10-

நம்பி மகன் = நம்பிக்கு மகன் (நம்பி, மகன் இரண்டும் உயர்திணை. எனவே அது-உருபு கெட்டு, கு-உருபு வந்தது) -11-

புலி கொல் யானை – இது தடுமாறு தொழிற்பெயர். இதில் கொன்றது புலியா, யானையா என்று தடுமாறும் நிலை உள்ளது. இதனை விரிக்கும்போது புலியைக் கொன்ற யானை என்றும், புலியால் கொல்லப்பட்ட யானை என்றும் விரித்துக்கொள்ள வேண்டும். -12-

இந்தத் தடுமாறு தொழிற்பெயரை அடுத்து வரும் வினையால் விளங்கிக்கொள்ளலாம். புலிகொல் யானைக்கோடு வந்தது (புலி யானையைக் கொன்றது) புலிகொல்யானை ஓடிற்று (புலியைக் கொன்றுவிட்டு யானை ஓடிற்று) -13-

போற்றிவா என்பது ஓம்படைக்கிளவி. புலி போற்றிவா என்றால் புலி தாக்குதலிலிருந்து உன்னைப் போற்றிக்கொண்டு வா என்றும், புலியை நீ போற்றிவா (வளர்த்துவா) என்றும் பொருள் விரித்துக்கொள்ளவேண்டும். -14-

காட்டியானை என்பது காட்டில் வாழும் யானை. காட்டியானை என்பது வாழ்ச்சிப் பொருள். இதனைக் காட்டது யானை, காட்டின்கண் யானை என்று 6, 7 உருபுகளால் விரித்துக்கொள்ள வேண்டும். -15-

நகர்-பலி என்பது கொடையெதிர் கிளவி. நகருக்கு உணவு என்பது அதன் பொருள். இதனை நகர் தரும் உணவு என்னும் பொருள்பட நகரது பலி என்றும் விரித்துக்கொள்ளலாம். (வேற்றுமை 4, 6 மயக்கம்) -16-

புலியஞ்சும் – இது அச்சக்கிளவி. இதனைப் புலியின் அஞ்சும் என்றும், புலியை அஞ்சும் என்றும் விருத்துக்கொள்ள வேண்டும். (புலியின் அஞ்சும் என்றால் புலியை எண்ணி அஞ்சும் என்றும், புலியை அஞ்சும் என்றால் புலியைக் கண்டு அஞ்சும் என்றும் பொருணர்ந்துகொள்ள வேண்டும்) -17-

இவ்வாறு வேற்றுமை உருபினும், பொருளினும் மெய் தடுமாறி நிற்கும் -18-

யானையது கோட்டை நுனிக்கண் குறைத்தான் – இப்படிப் பல உருபுகள் அடுக்கி வந்தாலும் ஒருசொல் நடையாகக் கொள்ளப்படும். (ஒருசொல் = ஒரு வாக்கியம்) -19-

Scanned with CamScanner

வேற்றுமை உருபு இடையிலும், இறுதியிலும் வரும் நிலம் கடந்தான், நிலத்தைக் கடந்தான் – இடையில் வந்தது கடந்தான் நிலத்தை – இறுதியில் வந்தது -20-

சாத்தனதனை, சாத்தனதனொடு – இவற்றில் வேற்றுமை உருபுகள் அது என்னும் பிறிதொன்றை ஏற்றன. நிலம் கடந்தான் – உருபு தொக வந்தது -21-

கடந்தான் நிலம் – இரண்டாம் வேற்றுமை இறுதிக்கண் தொக்கது. இருந்தான் குன்றத்து – இதில் ஏழாம் வேற்றுமை உருபு இறுதிக்கண் தொக்கது. ஏனைய வேற்றுமை உருபுகள் இறுதியில் தொகுவதில்லை. -22-

எந்த வேற்றுமை உருபில் கூறியிருந்தாலும் வேற்றுமைப்பொருள் செல்லும் வழிதான் வேற்றுமையாக எடுத்துக்கொள்ளப்படும். -23-

கு, ஐ, ஆன் வேற்றுமை உருபுகள் செய்யுளில் அ எழுத்தைக் கொண்டு முடியும் -24-

'கடிநிலை இலவே ஆசிரியர்க்க' என்று செய்யுள் இறுதியில் வருகிறது. இது 'ஆசிரியர்க்கு' என வரவேண்டிய ஒன்று. (தொல்காப்பியம் 1-4-24) -25-

'காவ லோனக் களிறு அஞ்சும்மே' – இதில் காவலோனை என்று சொல்லவேண்டியது காவலோன கன வந்துள்ளது -25- இந்த மாறுதல் உயர்திணையில் மட்டுமே வரும். அஃறிணையில் வராது -26-

யானையது கோடு (யானைக்கு) 6>4 இவளைக் கொள்ளும் இவ்வணி (இவட்கு) (கொள்ளும் = பொருந்தும்) 2>4 வாயான் தக்கது வாய்ச்சி (வாய்க்கு) வாய்ச்சி = வாய்மை) 3>4 ஆவினது கன்று (ஆவிற்கு) 6>4 கருவூரின் கிழக்கு (கருவூர்க்கு) 5>4 சாத்தனின் கொடியன் (சாத்தனுக்கு) 5>4 மாரியுள் வந்தான் (மாரிக்கு) 7>4 ஊரிற் றீர்ந்தான் (ஊருக்கு) 5>4 உறையூரிற் பெரிது கருவூர் 5>4 இப்படி உருபுகள் மயங்கும் -27-

இப்படிப் பிற உருபும் பொருளும் மயங்கி வரினும் மொழிக்கு மானம் இல்லை (மானம் = குற்றம்) -28-

## வினைச்சொல்

தொழில் தோற்றுவிக்கும் முதனிலைகள் எட்டு -29- வனைந்தான் என்பது தொழில் வினை - வனைதல் செய்வது - குயவன் செயப்படுபொருள் - குடம் நிலம் - படர்க்கை (இருந்து செய்த இடம்) காலம் - இறந்த காலம் (பகலோ, இரவோ) கருவி - கோல், திரிகை இன்னதற்கு - யாரோ ஒருவருக்காக இது பயன் – அறமோ, பொருளோ பயக்கும்

எட்டில் சில குன்றுவதும் உண்டு -30- கொடி வளர்ந்தது என்பதில் செயப்படுபொருள், இன்னார்க்கு, இது பயன் என்னும் மூன்றும் இல்லை.

Scanned with CamScanner

ஆகுபெயர்

ஒன்றன் பெயர் மற்றொன்றுக்கு ஆகி நிற்பது ஆகுபெயர். 1. முதலில் கூறும் சினை அறி கிளவி \ தெங்கு தின்றான் - தெங்கு என்னும் தென்னைமரம் தேங்காய்க்கு ஆயிற்று \ 2. சினையில் தோன்றும் புதலறி கிளவி \ இலை நட்டு வாழும் – இலையை யட்டதால் முதல் தோன்றி வாழும் (வெற்றிலை) 3. பிறந்தவழி கூறல் \ காஞ்சிபுரம் – இப் பட்டுச்சேலை காஞ்சிபுரம் 4. பண்புகொள் பெயர் \ நீலம் உடுத்தினாள் – நீல நிறமுள்ள ஆடை உடுத்தினாள். 5. இயன்றது மொழிதல் \ ஒரு பிடி சோறு – பிடிக்கும் தொழில் 6. இருபெயர்-ஒட்டு \ பொற்றொடி வந்தாள் 7. வினைமுதல் உரைக்கும் கிளவி \ தொல்காப்பியம், கபிலம்

இந்த ஆகுபெயர்கள் தம்மோடு தொடர்புடைய பொருளுக்கும், தொடர்பில்லாப் பொருளுக்கும் ஆகி வரும். -32- தேன்மொழி வந்தாள் என்னும்போது தேனோடும், மொழியோடும் தொடர்பில்லாத அம்மொழி பேசும் ஒருத்திக்கு ஆகி வந்தது.

பொருளை விரிக்கும்போது தொடர்புள்ள வேற்றுமை தந்து விரித்துக்கொள்ள வேண்டும். -33- தெங்கு தின்றான் என்னும்போது தெங்கினது காய் என விரித்து உணர்ந்துகொள்ள வேண்டும்.

அளவு, நிறை ஆகியவற்றாலும் ஆகுபெயர் அமையும் -34- ஒரு உழக்கு தருக – ஒரு உழக்கு அளவு அளந்து தருக ஒரு தொடி தருக – ஒரு தொடி அளவு நிறுத்துத் தருக

சொல்லப்படாத வகையில் ஆகுபெயர் தோன்றினாலும் இந்த முறையில் உணர்ந்துகொள்ள வேண்டும். -35

தொல்காப்பியம் விளிமரபுச் செய்திகள்

## பொருளடக்கம்


- 1உயர்திணை
  - 1.1அள்பெடைப் பெயர்
  - 1.2அண்மை விளி
  - 1.3சேய்மை
  - 1.4ஈற்றயல் நீட்டம்
  - 1.5தொழில்-பெயர்
  - 1.6பண்புப்பெயர்
  - 1.7முறைப்பெயர்
- 2விளி ஏலாப் பெயர்கள்
- 3இவற்றையும் காண்க
- 4கருவிநூல்


கூ உயிர்-இறுதி

Scanned with CamScanner

உயர்திணையில் இ உ ஐ ஓ எழுத்தில் முடியும் உயிரிறுதிச் சொற்கள் மட்டுமே விளி கொள்ளும். -3-

இ என்பது ஈ ஆகும் -4- நம்பி - நம்பீ

ஐ என்பது ஆய் ஆகும் -4- நங்கை – நங்காய்

ஓ என்பது ஏ ஏற்கும் -5- கோ - கோவே

உ எனபது ஏ ஏற்கும் -5- வேந்து – வேந்தே

இங்கு உ எழுத்து குற்றியலுகரம் -6-

இந்த 4 எழுத்து அல்லாமல் பிற எழுத்துக்கள் உயர்திணையில் விளி ஏலா -7-

இ இறுதி அளபெடை கொள்ளும் -8- தோழி – தோழீஇ

(கணி – கணியே என்பதில் கணி என்பது பட்டப்பெயர்)

மெய்-இறுதி

உயர்திணையில் ன ர ல ள ஒற்றில் முடியும் சொற்கள் விளி ஏற்கும் -11-

அன் இறுதி ஆ ஆகும் -13- சோழன் – சோழா, சேர்ப்பன் – சேர்ப்

**அளபெடைப் பெயர்**

அளபெடைப்பெயர் அளபெடையாக விளி கொள்ளும் -18-

அழாஅன் (=அழல் மூட்டிச் சுடுபவன்), புழாஅன் (=புழை என்னும் குகையில் வாழ்பவன்)

மகாஅர், சிறாஅர் – அளபெடைப்பெயர் -24-

'மகாஅளின் நிறம் போல் மழை' – அளபெடைப்பெயர் இயல்பு -32-

**ற அண்மை விளி**

உயிர்-இறுதி

நம்பி வாழி, நங்கை வாழி, வேந்து வாழி, தோழி வாழி, அன்னை வாழி (இயல்பு) -10-

மெய்-இறுதி

அண்மை விளி ஆயின் அன் இறுதி அ ஆகும் -14- ஊரன் – ஊர, சேர்ப்பன் – சேர்ப்ப

**சேய்மை[**

நம்பீ சாத்தா -35-

அம்மா சாத்தா -36-

**ஈற்றயல் நீட்டம்[**

ஈற்றயல் நீட்டச் சொல்

ஆன் இறுதி இயற்கையாகும் -15- சேரமான், மலையமான்

எம்மான், கோமான் -28-

Scanned with CamScanner

ஈற்றயல் நீளும் சொல்

குரிசில் – குரிசீல், தோன்றல் – தோன்றால் (ஈற்றயல் நீட்டம்) -27-

பார்ப்பார் – பார்ப்பீர் (ஆர் – ஈர்) -21-

கூத்தர் – கூத்தீர் (அர் – ஈர்) -21-

தொழில்-பெயர்

ஆன் இறுதி ஆய் ஆகும் - உண்டான் – உண்டாய்! -16-

உண்டார் – உண்டீரே (ஆர் – ஈர்+ஏ) -22-

உண்டான் – உண்டாய் -29-

பண்புப்பெயர்

ஆன் இறுதி ஆய் ஆகும் - கரியான் – கரியாய்! -17-

செய்யார் – செய்யீரே (ஆர் – ஈர்+ஏ) -23-

கரியான் – கரியாய் -29-

முறைப்பெயர்

ஐ இறுதி ஆ, ஆகும் - அன்னை – அன்னா -9-

ஏ கொள்ளும் - மகன் – மகனே! -19-

மகள் – மகளே -30-

விளி ஏலாப் பெயர்கள்

உயர்திணையில் ன ர ல ள அல்லாத ஒற்றில் முடியும் சொல்

விளி கொள்ளாது -12-

தான், யான், -20-

நீயிர், -26-

அவன், இவன், உவன், யாவன்(எவன்) -20-

அவர், இவர், உவர் –-25-

யாவர் –-26-

அவள், இவள், உவள், யாவள் –-31-

நமன், நமள், நமர் -37-

நுமன், நுமள், நுமர் -37-

தமன், தமள், தமர் -37-

எமன், எமள், எமர் -37-

தம்மான், எம்மான், நும்மான் – போன்றவை. -37-

தொல்காப்பியம் பெயரியல் செய்திகள்

## பொருளடக்கம்

- 1பொதுச் செய்தி
- 2உயர்திணை
- 3.அஃறிணை

Scanned with CamScanner

ஒன்று, பத்து –எண்ணுக்குறிப் பெயர் -1

பொன்னன்னது, பொன்னன்ன –ஒப்பினாகிய பெயர் -1 (ஆக மொத்தம் 9)

'கள்'ளொடு சிவனும் பெயர்
பல-அறி சொல்லாக வரும் -15-

ஆ, நாய், குதிரை, கழுதை, தெங்கு, பலா, மலை, கடல் – தொடக்கத்தன.

இனத்தைக் குறிக்கும் இவை ஒருமைக்கும், பன்மைக்கும் பொதுவானவை.

தொல்காப்பியல் இவற்றை 'இயற்பெயர்' என்று குறிப்பிடுகிறார். (உரையாசிரியர் இளம்பூரணர் இவற்றைச் 'சாதிப்பெயர்' என்று குறிப்பிடுகிறார்)

பல-அறி சொல்

ஆக்கள், குதிரைகள், மலைகள்

அன்ன பிற -16-

பிறிது, பிற, மற்றையது, மற்றையவை, பல்லவை, சில்லவை, உள்ளது, இல்லது, உள்ளன, இல்லன –என்னும் தொடக்கத்தன

அஃறிணை விரவுப்பெயர்

**அஃறிணை விரவுப்பெயர் வினையொடு வரும்போது பால் உணர்த்தும் -17-**

---

ஆ வந்தது, குதிரை வந்தது – ஒருமை

ஆ வந்தன, குதிரை வந்தன – பன்மை

விரவுப்பெயர் (இரு திணையிலும் வரும் பெயர்) வினையொடு வரும்போதுதான் பால் உணர்த்தும் -18-

சாத்தன் வந்தான், முடவன் வந்தான் – உயர்திணை

சாத்தன் வந்தது, முடவன் வந்தது – அஃறிணை

செயல்படுவதாலும் பால் உணரப்படும் -19-

சாத்தன் யாழ் இசைக்கும்

சாத்தி சாந்து அரைக்கும்

Scanned with CamScanner

பெயர்ச்சொல் வகைப்பாடு

**பெயர்ச்சொல் 10 வகை இயற்பெயர் 4, சினைப்பெயர் 4, முறைப்பெயர் 2 (நூற்பா 20 முதல் 25)**

---

ஆண்பெயர், பெண்பெயர், ஒன்றன் பெயர், பலவற்றின் பெயர் என இயற்பெயர் 4 வகை

ஆண் சினைப்பெயர், பெண் சினைப்பெயர், ஒன்றன் சினைப்பெயர், பலவற்றின் சினைப்பெயர், எனச் சினைப்பெயர் 4 வகை

ஆண் முறைப்பெயர், பெண் முறைப்பெயர் என முறைப்பெயர் 2 வகை

பெண்பெயர் ஒருத்திக்கும், ஒன்றன் சினைப்பெயருக்கும், ஒன்றன் முறைப்பெயருக்கும் பொது -26-

சாத்தி வந்தாள், சாத்தி வந்தது - இயற்பெயர்
முடத்தி வந்தாள், முடத்தி வந்தது - சினைப்பெயர்
முடக்கொற்றி வந்தாள், முடக்கொற்றி வந்தது – ஒன்றன் சினைப்பெயர்
தாய் வந்தாள், தாய் வந்தது –ஒன்றன் முறைப்பெயர்என வரும்

ஆண் பெயர் -27-

சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது
முடவன் வந்தான், முடவன் வந்தது
முடக்கொற்றன் வந்தான், முடக்கொற்றன் வந்தது
தந்தை வந்தான், தந்தை வந்தது

என வரும்.

பன்மைப்பெயர் ஒன்றன்-பாலுக்கும், பலவின்-பாலுக்கும், ஒருவருக்கும் உரிமை பெற்று வரும் -28-

யானை வந்தது, யானை வந்தன, யானை வந்தான், யானை வந்தாள்
நெடுங்கழுத்தல் வந்தது, நெடுங்கழுத்தல் வந்தன, நெடுங்கழுத்தல் வந்தான், நெடுங்கழுத்தல் வந்தாள்
பெருங்கால் யானை வந்தது, பெருங்கால் யானை வந்தன, பெருங்கால் யானை வந்தான், பெருங்கால் யானை வந்தாள்

ஒருமைச் சுட்டிய பெயர் ஒன்றற்கும், ஒருவர்க்கும் பொருந்தும் -29-

கோதை வந்தது, கோதை வந்தான், கோதை வந்தாள்
சொவியிலி வந்தது, செவியிலி வந்தான், செவியிலி வந்தாள்
நெடும்புற மருதி வந்தது, நெடும்புற மருதி வந்தான், நெடும்புற மருதி வந்தாள்

Scanned with CamScanner

- தாம் என்பது பன்மைக்கு உரியது -30-

தாம் வந்தார், தாம் வந்தன

தான் என்பது ஒருமைக்கு உரியது -31-

தான் வந்தான், தான் வந்தாள், தான் வந்தது

எல்லாம் என்பது மூவிடத்துக்கும் உரியது -32-

எல்லாம் வந்தேம், எல்லாம் வந்தீர், எல்லாம் வந்தார்

உயர்திணையில் தன்னை உள்ளிட்ட பன்மைக்கே இது உரியது. படர்க்கைப் பனமைக்கு எல்லாம் என்னும் சொல் வரக்கூடாது. -33-

(ஆனால் இக்காலத்தில் யானையெல்லாம் வந்தன என்று வழங்கிவருகிறோம்)

நீயிர், நீ என்னும் சொற்களுக்குப் பால் இல்லை -34-

நீயிர் வந்தீர், நீ வந்தாய்

நீ ஒருமைக்கு உரியது -35-

நீயிர் பன்மைக்கு உரியது -36-

ஒருவர் என்னும் சொல் ஆண்பாலுக்கும், பெண்பாலுக்கும் உரியது -37-

ஒருவர் என்னும் சொல் தன்மையை உணர்த்துமானால் அப்போது அது பன்மை -38-

இவற்றையெல்லாம் உன்னிப்பாக முன்னத்தால் உணர்ந்துகொள்ள வேண்டும் -39-

பெண்மகன் என்னும் சொல் பெண்மகன் வந்தாள் என்று சொல்லப்படும் -40-

செய்யுளில் ஆன்-ஈறு ஓன்-ஈறு ஆகும் -41-

3 வில்லான் – வில்லோன்

செய்யுளில் இறைச்சிப்பொருளை (கருப்பொருளை)ச் சுட்டும் பெயர் உயர்திணையை உணர்த்தாது -42-

கடுவன் முதுமகன் கல்லா மூலற்கு
வதுவை வந்த வன்பறழ்க் குமரி

இதில் கடுவன், முதுமகன், மூலன், குமரி என்னும் சொற்கள் உயர்திணை அன்று.

கடுவன் என்பது ஆண் குரங்கையும், மூலன் என்பது பெண்குரங்கையும், குமரி என்பது குரங்குக் குட்டியையும் உணர்த்துகின்றன.

Scanned with CamScanner

## பொருளடக்கம்


- 1வினையின் செயல்
- 2உயர்திணை
  - 2.1குறிப்பு வினைமுற்று
- 3அஃறிணை
  - 3.1குறிப்பு வினைமுற்று
  - 3.2விரவுவினை


## த்த வினையின் செயல்[தொகு]

வினைச்சொல் வேற்றுமை கொள்ளாது காலம் காட்டும் -1-
காலம் மூன்று வகைப்படும் -2-
இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூன்று காலமும் தெரியும்-நிலையிலும், குறிப்பு-நிலையிலும் தோன்றும் -3-
வினைச்சொல்லானது உயர்திணைக்கும், அஃறிணைக்கும், இரண்டிலும் விரவும் பெயர்க்கும் உரிமை உடையது -4-

## ம் உயர்திணை[தொகு]

உயர்திணையில் தன்மைப்பன்மை வினைச்சொல் 8 ஈறுகளில் முடியும் -5-

1. அம் – யாம் வந்தனம்
2. ஆம் – யாம் வந்தாம்
3. எம் – யாம் வந்தனெம்
4. ஏம் – யாம் வந்தேம்
5. கும் – யாம் உண்கும்
6. டும் – யாம் உண்டும்
7. தும் – யாம் வருதும்
8. றும் – யாம் சேறும்

தன்மை-ஒருமை வினைச்சொல்லின் 7 ஈறு -6-

1. ப என் – யான் வந்தனென்
2. ஏன் – யான் வந்தேன்
3. அல் – யான் வருவல்
4. கு – யான் உண்கு

5. டு – யான் உண்டு (உண்கிறேன்)
6. து – யான் வருது (வருகிறேன்)
7. று – யான் சேறு (செல்கிறேன்)

செய்கு வந்தேன் (செய்துகொண்டு வந்தேன்) என மற்றொரு வினை கொண்டும் முடியும் -7- படர்க்கை-ஒருவர் 4 ஈறு கொள்ளும் -8-

1. அன் – அவன் வந்தனன்
2. ஆன் – அவன் வந்தான்
3. அள் – அவன் வந்தனள்
4. ஆள் – அவள் வந்தாள்

படர்க்கை-பலர் 3 ஈறு கொள்ளும் -9, 10-

1. அர் – உண்டனர்
2. ஆர் – உண்டணார்
3. ப – உண்ப
4. மார் – ஆர்த்தார் கொண்மார் வந்தார் (ஆரவாரத்தோடு வாங்கிக்கொண்டே வந்தனர்)

இந்த 23 ஈறுகள் பன்மையும் ஒருமையும் ஆகிய பால் உணர்த்திக்கொண்டு உயர்திணையில் வரும். -11-

(மேலே காட்டப்பட்ட 24-ல் மார்-ஈறு பன்மையையோ ஒருமையையோ காட்டாமையால் அது விலக்கப்பட்டு 23 என ஈறு வரையறுக்கப்பட்டது)

ரு வந்தனம், வந்தாம் தொடக்கத்தன தன்மையொடு முன்னிலையையும் சேர்த்து உணர்த்தும் -12- யார் என்னும் சொல் 3 பாலுக்கும் உரியது. -13-

அவன் யார், அவள் யார், அவர் யார்

பால் உணரும்படி வந்த உயர்திணை ஈறு மூன்றும் செய்யுளில் ஆ<ஓ ஆகும் -14-

வந்தான் – வந்தோன்
வந்தாள் - வந்தோள்
வந்தார் - வந்தோர்

முன்னிலையில் வரும் ஆய் என்னும் சொல்லும் அவ்வாறு வரும் -15-

வந்தாய் – வந்தோய்

**ப் குறிப்பு வினைமுற்று**

]

குறிப்பு வினைமுற்றில் காலம் குறிப்பால் உணர்த்தப்படும் -16-

Scanned with CamScanner

1. உடையன், உடையள், உடையர் – அது என்னும் ஆறாம் வேற்றுமை
2. நிலத்தன், நிலத்தள், நிலத்தர் – கண் என்னும் ஏழாம் வேற்றுமை
3. பொன் அன்னன், பொன் அன்னள், பொன் அன்னர் – உவமைப் பொருள் பற்றிப் பிறந்தவை
4. கரியன், கரியள், கரியர் – பண்பு பற்றிப் பிறந்தவை
5. அல்லன், அல்லள், அல்லர் – அன்மை பற்றியவை
6. இல்லன், இல்லள், இல்லர் – இன்மை பற்றியவை
7. உளன், உளள், உளர் – உண்மை பற்றியவை
8. வல்லன், வல்லள், வல்லர் – வன்மை பற்றியவை
9. நல்லன், நல்லள், நல்லர் – பிற
10. தீயன், தீயள், தீயர் – பிற
11. மூவாட்டையன், மூவாட்டையள், மூவாட்டையர் – பிற

இங்குக் காட்டப்பட்ட படர்க்கைக் குறிப்பு வினைமுற்றுகளைத் தன்மையோடும் ஒட்டிக்கொள்ள வேண்டும்

உயர்திணை வினைமுற்று ஈறுகள் 23 என்று கூறப்பட்டன. அவற்றிற்கும் இந்தக் குறிப்பு வினைமுற்று ஈறுகளுக்கும் வேறுபாடு இல்லை. -17-

1. வடாஅது வேங்கடம்
2. தெனாஅது குமரி

இவற்றில் வடாது, தெனாது என்பவை குறிப்பு-வினைமுற்று

## பு அஃறிணை[

பலவற்றுப் படர்க்கை ஈறுகள் 3. அவை: அ, ஆ, வ – என்பன -18-

1. உண்டன, தின்றன – அ
2. உண்ணா, தின்னா – ஆ
3. உன்குவ, தின்குவ - வ

ஒன்றன் படர்க்கை 3 குற்றியலுகர ஈறுகள். அவை து, டு, று -19-

1. உண்டது – து
2. குருதிப் பூவின் குலைக்காந்தட்டு – டு
3. ஓடிற்று – று

இந்த 6 ஈறுகள் அஃறிணையில் பால் உணர்த்துவன -20-
எவன் அது, எவன் அவை என எவன் என்னும் சொல் ஒன்றன்பாலுக்கும், பலவின்பாலுக்கும் பொதுவாக வரும். -21-

Scanned with CamScanner

குறிப்பு வினைமுற்று

அஃறிணைக் குறிப்பு வினைமுற்று -22-

1. கோடின்று செவியின்று – இன்று–பொருள் கோடு இல்லாதது
2. கோடில செவியில – இன்மை
3. கோடுடைய செவியுடைய – உடைமை
4. நாய் அன்று நரி அன்று – அன்று பொருள்
5. கோடுடைத்து செவியுடைத்து – உடைமை
6. உழுந்தல்ல பயறல்ல – அல்ல பொருள்
7. கரிது கரிய – பண்புகொள் பெயர்
8. உழுந்துள பயறுள – உள என்னும் கிளவி
9. குறுங்கோட்டது குறுங்கோட்டன – பண்பினாகிய சினைமுதல் கிளவி
10. பொன்னன்னது பொன்னன்ன – ஒப்பொடு வரூஉம் கிளவி

விரவுவினை

விரவுத்திணைப் பெயர்கள் -23-

1. முன்னிலை
2. வியங்கோள்
3. வினையெஞ்சு கிளவி (வினையெச்சம்)
4. இன்மை செப்பல்
5. வேறு –என்னும் கிளவி
6. செய்ம்மன
7. செய்யும்
8. செய்த

ஆகிய 8 சொல்

ஒருவற்கும் ஒன்றற்கும் பொது -24-

1. நீ உண்டி. நீ தின்றி – இ
2. நீ உண்டனை. நீ தின்றனை – ஐ
3. நீ உண்டாய். நீ தின்றாய் – ஆய்
4. நீ உண்மின். நீ தின்மின் - மின்

பல்லோர்க்கும் பலவற்றுக்கும் பொது -25-

1. நீவிர் உண்டனிர். தின்றனிர் – இர்
2. நீவிர் உண்டீர். தின்றீர் – ஈர்
3. நீவிர் உண்மின். தின்மின் – மின்

முன்னிலை அல்லாத ஏனை ஏழும் 5 பாலுக்கும் உரியன -26-

Scanned with CamScanner

6. செய்யிய
7. செயின்
8. செய
9. செயற்கு

ஆகிய 9 வாய்பாட்டுச் சொற்கள்

மேலும் வினையெச்ச ஈறுகள் -30-

1. பின்
2. முன்
3. கால்
4. கடை
5. வழி
6. இடம்

ஆகிய 6

செய்து, செய்யூ, செய்பு ஆகிய 3 வினையெச்சங்கள் வினைமுதல் வினை கொண்டு முடியும் -31-

1. உழுது வந்தான்
2. உண்ணூ வந்தான்
3. நகுபு வந்தான் (= சிரித்துக்கொண்டே வந்தான்)

இவை மூன்றும் சினையொடு முடியா -32-

1. அது கை இற்று வீழ்ந்தது
2. அது கை இறூ வீழ்ந்தது
3. அது கை இறுபு வீழ்ந்தது

செய்தென என்னும் வினையெச்சம் -33-

1. மழை பெய்தென வளம் பெற்றது
2. மழை பெய்யப் பயிர் எழுந்தது
3. மழை பெய்தென உலகம் மலர்ந்தது
4. மழை பெய்தென மரம் குழைத்தது
5. உழுது வருதல்
6. உழுது வந்தேன்

வினையெச்சங்கள் பலவாகவும் வரும் -34-

உழுது உண்டுத் தின்று ஓடிப் பாய்ந்து வந்தான்

செய்யும், செய்த – பெயரெச்சங்கள் -35-

Scanned with CamScanner

1. அவன் உண்ணும் இல்லம், அவள் உண்ணும் இல்லம், அது உண்ணும் இல்லம், அவை உண்ணும் இல்லம் – பொருளொடு முடிதல்
2. அவன் உண்ணும் காலை – காலமொடு முடிதல்
3. அவன் எறியும் கருவி – கருவியொடு முடிதல்
4. உண்ணும் அவன் – வினைமுதலொடு முடிதல்
5. அவன் உண்ணும் ஊண் – ஊண் என்னும் வினைப்பெயரொடு முடிதல்

1. அவன் உண்ட இல்லம் (இதனை முறையானே 'செய்த' வாய்பாட்டுப் பெயரெச்சத்துக்கும் பொருத்திக்கொள்க)

மூவிடப் பெயர்க்கும் கொள்க -36-

1. யான் உண்ட இல்லம்
2. நீ உண்ட இல்லம்
3. அவன் உண்ட இல்லம்

பெயரெச்சமும், வினையெச்சமும் எதிர்மறையுல் வந்தாலும் காட்டிய வழியில் இயையும் -37-

1. உண்ணாச் சாத்தன் – பெயரெச்சம்
2. உண்ணாது வந்தான் – வினையெச்சம்

இவற்றிற்கு இடையில் வேறு சொல்லும் வரும் -38-

1. உப்பின்று புற்கை உண்கமா கொற்கையானே – இலைதழை உணவைக் குறிக்கும் புற்கை என்னும் சொல் வினையெச்சத்துக்கு இடையே வந்தது.
2. அட்ட செந்நெற் சோறு – இதில் செந்நெல் என்னும் சொல் பெயரெச்சத்துக்கு இடையே வந்தது.

செய்யும் என்பது செய்ம் எனவும் வரும் -39-

வாம் புரவி (வாவும் புரவி) (வாவும் = தாவும்)

செய்து என்பது நிகழ்கால வினையெச்சம். இது எதிர்காலத்துக்கும் வரும் -40-

உழுதுவரும் சாத்தன்

இயற்கை நிலையை நிகழ்காலத்தால் சொல்லவேண்டும் -41-

மலை நிற்கும்

விரைவு கருதி நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் இறந்தகாலத்தால் சொல்லலாம். -42-

Scanned with CamScanner

வந்தேன் (வருகின்ற ஒருவன், அல்லது வரப்போகும் ஒருவன் விரைவு கருதி இவ்வாறு சொல்வான்

உறுதிப்பொருளை நிகழ்காலத்தால் சொல்லவேண்டும் -43-

அ அளவறிந்து உண்பான் நலம் பெறும் (இதில் பெறும் என்பது நிகழ்காலம்) அறம் செய்தான் சுவர்க்கம் புகும் என்பது உரையாசிரியர் இளம்பூரணர் தரும் எடுத்துக்காட்டு)

இது செயல்வேண்டும் – என்று சொன்னால் அது செய்வானையும், அதற்குத் துணைநிற்கும்படி பிறரையும் வேண்டிக்கொள்வதாக அமையும். -44-

சாத்தன் ஓதல் வேண்டும் – என்று சொன்னால் அது சாத்தன் ஓதல் வேண்டும் என்பதோடு, பெற்றோர், ஆசிரியர் முதலானோர் அவன் ஓத உறுதுணை புரிதல் வேண்டும் என்பதனையும் உணர்த்தும்.

வற்புறுத்த வரும் வினாவிடை எதிர்மறுக்கும் பொருளையும் உணர்த்தும் -45-

1. வைதேனோ – என்பது வைதது தற்செயலாய் நிகழ்ந்ததை உணர்த்தும்
2. வைதேனா – என்பது வையவில்லை என்னும் பொருளை உணர்த்தும்

இறந்தகாலத்தால் கூறப்படுவன -46-

1. எறும்பு முட்டை கொண்டு தெற்றி ஏறின் 'மழை பெய்த்து' – இது தெளிவு பற்றியது
2. முள்ளுக்காட்டில் செல்லின் 'துணி மாட்டிக்கொண்டான்' – இது இயற்கை

செயப்படு பொருள் செய்த்து போலவும் சொல்லப்படும் -47-

இல்லம் மெழுகிற்று, சோறு அட்டது

மயங்குமொழிக் கிளவி இறந்த-காலத்தையும், எதிர்காலத்தையும் உணர்த்தும் -48-

யாம் பண்டு விளையாடுவது இக்கா – என்னும்போது பண்டு என்னும் இறந்தகாலத்தையும், விளையாடுவது என்பது எதிர்காலத்தையும் உணர்த்திக் காலம் மயங்கிற்று.

மயங்குமொழிக் கிளவியில் நிகழ்காலமும் மழங்கும் -49-

Scanned with CamScanner

யாம் பண்டு விளையாடும் கா இது – என்னும்போது பண்டு என்பது இறந்தகாலம். விளையாடும் என்பது நிகழ்காலம்

தொல்காப்பியம் இடையியல் செய்திகள்

**பொருளடக்கம்**

[மறை]


- 1இடையியல் சொல்லும் செய்திகள்
  - 1.1இடைச்சொல் - தொல்காப்பியர் விளக்கம்
  - 1.2இடைச்சொல்லுக்குப் புறனடை Addenda
  - 1.3இடைச்சொற்கள்


## இடைச்சொல் - தொல்காப்பியர் விளக்கம்

இடைச்சொல் பற்றிய விளக்கங்கள் இவ்வியலின் முதல் இரு நூற்பாக்களில் கூறப்பட்டுள்ளன.

- பெயரொடும் வினையொடும் நடைபெற்று இயலும்.
- இடைச்சொல்லுக்கென்று தனி இயல்பு இல்லை.
- சொற்கள் புணரும்போது அவற்றிற்கு இடையே நின்று அவற்றின் பொருளை உணர்ந்துகொள்ள உதவும்.

  புணரியல் சாரியைகள்

- வினைச்சொல்லில் காலம் காட்டும்.

  செய்தான்(த்), செய்கிறான்(கிறு), செய்வான்(வ்) - போன்றவை

- வேற்றுமை உருபு

  ஐ, ஆல், கு, இன், அது, கண் - போன்றவை

- அசைநிலைக் கிளவி
- இசைநிறைக் கிளவி
- உரிய குறிப்புப்பொருள்
- ஒப்பு இல்லாப் பொருள்

**இடைச்சொல்லுக்குப் புறனடை Addendaகூறப்படாத பொருள் தோன்றினும் கொள்க. (நூற்பா 47)**

- கூறப்படாத பொருள் தோன்றினால் கூறப்பட்டவற்றோடு பொருத்திப் பார்த்துக்கொள்க. (நூற்பா 48)

Scanned with CamScanner

இடைச்சொற்கள்அகரவரிசைத் தொகுப்பு. ஒவ்வொரு சொல்லும் இந்த இயலில் எத்தனையாவது நூற்பாவில் விளக்கப்பட்டுள்ளது என்பது ஒவ்வொரு சொல்லுக்கும் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

*(1-10)[ அந்தில் – அந்தில் என்பது அசைநிலைக்கிளவி, இது ஆங்க என்னும் இடம்சுட்டு பொருளிலும் வரும் -19*

1. அம்ம – கேட்பிக்கும் -28
2. அரோ – அசைநிலைக்கிளவி -31
3. ஆக – பிரிவில் அசைநிலை -32
4. ஆகல் – பிரிவில் அசைநிலை -32
5. ஆங்க – உரையசை -29
6. ஆர் – அசைநிலை -23, இயற்பெயர் முன் நின்றால் பன்மை-வினை கொண்டு முடியும் -22
7. இக – முன்னிலை அசைச்சொல் -26
8. இகும் – முன்னிலை அசைச்சொல் -26, இது தன்மை இடத்திலும் வரும் -27,
9. உம் [1]

*இ (11-20)[ எல் – இலக்கம் -21*

1. எற்று – இறந்த பொருள் -15
2. என – வினை, குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர் - ஆகிய 6 வகையான சொற்களோடு வரும். -10
3. என்பது – பிரிவில் அசைநிலை -32
4. என்றா – எண்ணுப்பொருள் -41 \ என்றா – எண்ணும்போது தொகைச்சொல் பெற்றே முடியும் -42
5. என்று – இசை, எண், குறிப்பு, பண்பு, பெயர், வினை (11) பிரிந்து சென்றும் ஒன்றும் (46)
6. எனா – உம்மை தொக்க எண் -41 \ எனா – எண்ணும்போது தொகைச்சொல் பெற்றே முடியும் -42
7. ஏ – ஈற்றசை,எண், தேற்றம், பிரிநிலை, வினா -9 \தெளிவு (அளபெடுக்கும்) -13 \ எண்ணும்போது இடை விட்டும் எண்ணப்படும் -40 \ எண்ணும்போது தொகைச்சொல் பெற்றே முடியும் -42 \ ஏ - (அன்றே) குறிப்பு -34 \ ஏ – (நன்றே) குறிப்பு -34 \ ஏ – அசைநிலை -24 \ ஏ – இசைநிறை -24 \ ஏ – ஈற்றில் ஓரசை ஆகலும் உரித்து -38 \
8. ஓ – (அந்தோ) குறிப்பு -34 \ ஓ – (அன்னோ) குறிப்பு -34 \ ஓ – சிறப்பு (அளபெடுக்கும்) -13 \ ஓ – பிரிநிலை -8
9. ஔ – (இறுதியில் உயிர்) அளபெடை, காலம் நோக்கிப் பொருள் தரும் -33

Scanned with CamScanner

*ல் (21-30)[ தா – அசைநிலைக்கிளவி -31*

1. குரை – அசைநிலை -24 \ குரை – இசைநிறை -24
2. கொன் – அச்சம், காலம், பயமிலி, பெருமை -6
3. கொல் - ஐயம் -20
4. சின் – தன்மை, படர்க்கை இடங்களிலும் வரும் -27 \ சின் – முன்னிலை அசைச்சொல் -26
5. தஞ்சம் – எண்மை -18
6. தில் – ஒழியிசைக்கிளவி, காலம், விழைவு (தன்மை) தில் – விழைவு -5
7. பிற – அசைநிலைக்கிளவி -31 (பொருளில் பிற) அது பிற, இது பிற, உது பிற - இளம்பூரணர் உரை மேற்கோள் (இச்சொல் இடைச்சொல்லாக வரும்போது இக்கால வழக்கில் 'அப்புறம்' என்று வழங்கப்படுகிறது. ஒருவன் தாஆன் பேசிக்கொண்டேயிருக்கும்போது இடையிடையே 'அப்புறம்' என்னும் சொல்லை மீண்டும் மீண்டும் சொல்லிக்கொள்வது உண்டு. இதுதான் இடைச்சொல்)
8. பிறக்கு – அசைநிலைக்கிளவி -31 அது பிறக்கு - இளம்பூரணர் உரை மேற்கோள்
9. போ – அசைநிலைக்கிளவி -31

*(31-41)[ போலும் (ஒப்பில் போலி) – உரையசை -30*

1. மதி – முன்னிலை அசைச்சொல் -26
2. மற்று – அசைநிலை, வினைமாற்று -14
3. மற்றையது – சுட்டுநிலை ஒழிய இனம் குறிக்கும் –16
4. மன் – ஆக்கம், ஒழியிசைக்கிளவி, கழிவு -4
5. மன்ற – தேற்றம் -17
6. மா – வியங்கோள் அசைச்சொல் -25
7. மாது – அசைநிலைக்கிளவி -31
8. மியா – முன்னிலை அசைச்சொல் -26
9. மோ – முன்னிலை அசைச்சொல் -26
10. யா – அசைநிலைக்கிளவி -31

தொல்காப்பியம் உரியியல் செய்திகள்

## பொருளடக்கம்


- 1உரியியலில் சொல்லப்படுபவை
  - 1.1உரிச்சொல் தொல்காப்பியர் விளக்கம்
    - 1.1.1பொது விளக்கம்
    - 1.1.2தொல்காப்பியம் தரும் விளக்கம்


Scanned with CamScanner

- 1.1.2.1தொல்காப்பியர் வேண்டுகோள்
- 1.1.2.2தொல்காப்பியரின் முடிப்புரை (புறனடை)

- 1.2தொல்காப்பியம் காட்டும் உரிச்சொற்கள்
  - 1.2.1பல சொல் ஒரு பொருட்கு உரிமையாகத் தோன்றுபவை (26)
    - 1.2.1.1(1-10)
    - 1.2.1.2(11-20)
    - 1.2.1.3(21-26)
  - 1.2.2ஒரு சொல் பல பொருட்கு உரிமையாகத் தோன்றுபவை (16)
    - 1.2.2.1(1-10)
    - 1.2.2.2(11-15)
  - 1.2.3ஒரு சொல் ஒரு பொருள் (106)
    - 1.2.3.1(1-10)
    - 1.2.3.2(11-20)
    - 1.2.3.3(21-30)
    - 1.2.3.4(31-40)
    - 1.2.3.5(41-50)
    - 1.2.3.6(51-60)
    - 1.2.3.7(61-70)
    - 1.2.3.8(71-80)
    - 1.2.3.9(81-90)
    - 1.2.3.10(91-100)
    - 1.2.3.11(101-107)


## உரிச்சொல் தொல்காப்பியர் விளக்கம்

### *பொது விளக்கம்[*

பெயருக்கென்றும், வினைக்கென்றும் உரிமை பூண்டு அவற்றின் உரி(தோல்) போலத் தமிழில் கலந்து வரும் சொற்களைத் தமிழர் உரிச்சொல் எனப் பாகுபடுத்திக் காட்டினர். இதனை, adjective, adverb வகை எனலாம். இந்தச் சொற்கள் பெயரையோ, வினையையோ குறிப்பவை அல்ல. அவற்றிற்கு உரிமை பூண்டு அவற்றை விளக்குபவை.

இரங்கல் என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். அது இசைப்பொருளைத் தரும் என்று தொல்காப்பியம் காட்டுகிறது.

"தண்பெயல் பொழிந்தென நீர் இரங்கு அரைநாள்" -நற்றிணை 341

இதில் இரங்கல் என்னும் சொல் இரங்கு என உரிந்து நிற்கிறது. இப்படிப் பெரும்பான்மை உரிந்து நிற்கும் சொல் உரிச்சொல்.

Scanned with CamScanner

இது நீர் என்னும் பெயர்ச்சொல்லுக்கு உரிமை பூண்டு நிற்பதாலும் உரிச்சொல்.

***தொல்காப்பியம் தரும் விளக்கம்***

நூற்பா 1,2

உரிச்சொல்லானது,

- இசை, குறிப்பு, பண்பு ஆகியவற்றை உணர்த்தும்.
- தன் உடலைப் பெயர்ச்சொல்லோடும், வினைச்சொல்லோடும் ஒன்றுபடுத்திக்கொள்ளும்.
- ஒரு சொல் பல பொருட்கு உரிமை பூண்டு விளங்கும். (தொல்காப்பியத் தொகுப்பில் 14 சொற்கள் உள்ளன)
- பல சொல் ஒரு பொருட்கு உரிமை பூண்டு விளங்கும். (தொல்காப்பியத் தொகுப்பில் 107 சொற்கள் உள்ளன)

தொல்காப்பியர் வேண்டுகோள்[இந்தச் சொல்லுக்கு இன்ன பொருள் என்றும், இந்தப் பொருளை இன்னின்ன சொற்கள் உணர்த்தும் என்று இங்குச் சொல்லப்படுகின்றன. இவை அன்றி வேறு வகையில் அமையுமாயினும் அவற்றையும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

- எல்லாருக்கும் பொருள் விளங்கும் உரிச்சொற்கள் இங்குக் காட்டப்படவில்லை. சிலருக்குப் புரியாத உரிச்சொற்கள் மட்டுமே இங்குக் கூறப்படுகின்றன.

தொல்காப்பியரின் முடிப்புரை (புறனடை

நூற்பா 91 முதல் 98

- உரிச்சொல்லுக்கு முன்னும் பின்னும் வரும் மொழியோடு இணைத்துப் பார்த்தால் உரிச்சொல்லின் பொருள் விளங்கும்.
- இங்கு உரிச்சொல்லுக்குக் கூறப்படாத பொருள் தோன்றினால், அவற்றையும் கொள்ளுதல் வேண்டும்.
- ஒரு நொல்லுக்குக் கூறப்பட்ட பொருளுக்குப் பொருள் காண்போமா1னால் அது வரம்பு இன்றி விரிந்துகொண்டே செல்லும்.
- பொருளை உணர்ச்சியால்தான் உணர்ந்துகொள்ள வேண்டும்.
- இந்தச் சொல்லுக்கு இந்தப் பொருள் தோன்றியது எப்படி என்பதை சொல்லும்போது தெரியாது. உணரும்போதுதான் தெரியும்.
- உரிச்சொல்லைப் பிரித்துத் தனியே சொல்லக்கூடாது. மொழியோடு சேர்த்துத்தான் சொல்ல வேண்டும்.
- உரிச்சொல்லை உணர்ந்துகொள்ள முன்னோர் கூறிய ஒம்படை ஆணையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

Scanned with CamScanner

- உரிச்சொல்லுக்குப் பொருள்வரம்பு இல்லை.

**வே தொல்காப்பியம் காட்டும் உரிச்சொற்கள்[**

தொல்காப்பியம் உரியியலில் 99 நூற்பாக்கள் உள்ளன. எந்த சொல் எந்த நூற்பாவில் உள்ளது என்பது ஆங்காங்கே குறிக்கப்பட்டுள்ளது.

மேலும் சொற்கள் முழுதுமாகத் தொகுக்கப்பட்டு, அகரவரிசைப்படுத்தப்பட்டு, தொல்காப்பிய நெறியில் பகுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன.

**இது பயன்பாட்டுக் கோணம்.**

***பல சொல் ஒரு பொருட்கு உரிமையாகத் தோன்றுபவை (26)[***

(1-10)[ (அச்சம்) = பேம், நாம், உரும் -67

1. (அரவம்) = கம்பலை, சும்மை, கலி, அழுங்கல் -51
2. (இசை) = துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கல் -60
3. (இளமை) = மழ, குழ -14
4. (உள்ளதன் நுணுக்கம்) = ஓய்தல், ஆய்தல், நிழத்துல், சாஅய் -32
5. (உள்ளது சிறத்தல்) = கூர்ப்பு, கழி -16
6. (சுழற்சி) = அலமரல், தெருமரல் -13
7. (செறிவு) = விறப்பு, வெறிப்பு, உறப்பு -49
8. (நசை) = நம்பு, மேவு -31
9. (நடுக்கம்) = அதிர்வு, விதிர்ப்பு -18

று 11-20 (நிறத்து உரு) = கறுப்பு, சிவப்பு -75

1. (நிறன்) = குரு, கெழு -5
2. (நுண்மை) = நொசிவு, நுழைவு, நுணங்கு -76
3. (நெடுமை) = வார்தல், போகல், ஒழுகல் -19
4. (நேர்பு) = வார்தல், போகல், ஒழுகல் -19
5. (நோய்) = பையுள், சிறுமை -43
6. (பரத்தல்) = ஞெமிர்தல், பாய்தல் -63
7. (பெட்பு) = பிணை, பேண் -40
8. (பெருமை) = தட, கய, நளி -22
9. (மிகுதி) = உறு, தவ, நனி -3

(21-26]

1. (வழுத்தல்) = பரவு, பழிச்சு -84
2. (வறுமை) = இலம்பாடு, ஒற்கம் -62
3. (விடல்) = தீர்தல், தீர்த்தல் -20
4. (விரைவு) = கதழ்வு, துனைவு -17

Scanned with CamScanner

5. (விளையாட்டு) = கெடவரல், பண்ணை -21
6. (வெகுளி) = கறுப்பு, சிவப்பு -74

***ஒரு சொல் பல பொருட்கு உரிமையாகத் தோன்றுபவை (16)[***

(1-10அழுங்கல் = 1 அரவப் பொருள -51 2 இரக்கம் - 52, 3 கேடு 52

1. இரங்கல் = 1 இசைப்பொருள் -60 2 கழிந்த பொருள் -61
2. எற்றம் = 1 துணிவு -39, 2 நினைவு -39
3. ஒழுகல் = 1 நெடுமை -19 2 நேர்பு -19
4. கடி = 1 அச்சம் -85 2 ஐயம், -86 3 கரிப்பு -86 4 காப்பு -85 5 கூர்மை -85 6 சிறப்பு -85 7 புதுமை -85 8 மிகுதி -85 9 முன்தேற்று -85 10 வரைவு -85 11 விரைவு -85 12 விளக்கம்
5. கய = 1 பெருமை -22, 2 மென்மை -24
6. தட = 1 கோட்டம் -23 (தடமருப்பு எருமை) 2 பெருமை -22 (தடந்தாள் களிறு)
7. தா = 1 வருத்தம் -46 2 வலி -46
8. நளி = 1 செறிவு -25 2 பெருமை -22 (நளிமுந்நீர் நாவாய் ஓட்டி)
9. நனவு = 1 அகலம் -78 2 களன் -78

(11-15பணை = 1 பிழைத்தல் -41, | 2 பெருப்பு -41

1. போகல் = 1 நெடுமை -19, | 2 நேர் -19
2. மத = 1 மடன் -79, | 2 வலி(மை) -79, | 3 மிகுதி, | 4 வனப்பு -80
3. வார்தல் = 1 நேர் -19 | 2 நெடுமை -19
4. விழுமம் = 1 சீர்மை(சிறப்பு), 2 இடும்பை -55
5. விறப்பு = 1 செறிவு -49, | 2 வெறூஉ -50

***ஒரு சொல் ஒரு பொருள் (106)***

ப (1-10)[ அதிர்வு = நடுக்கம் -18

1. அமர்தல் = மேவல் -82
2. அரி = ஐம்மை -58
3. அலமரல் = சுழற்சி -13
4. ஆய்தல் = உள்ளதன் நுணுக்கம் -32
5. இசைப்பு = இசை -12
6. இயம்பல் = இசைப்பொருள் -60
7. இயைபு = புணர்ச்சி -11
8. இலம்பாடு = வறுமை -62
9. இன்னல் = இன்னாமை -6

(11-20)[ உகப்பு = உயர்தல் -8

1. உசா = சூழ்ச்சி -72

Scanned with CamScanner

2. உயா = உயங்கல் (மனத் தளர்ச்சி) -71
3. உரு = உட்கு -4
4. உரும் = அச்சம் -67
5. உவப்பு = உவகை -8
6. உறப்பு = செறிவு -49
7. உறு = மிகுதி -3
8. எய்யாமை = அறியாமை -44
9. எறுழ் = வலி(மை) -90

(21-30)[ ஏ = பெற்று -7

1. ஐ = வியப்பு -87
2. ஒற்கம் = வறுமை -62
3. ஓய்தல் = உள்ளதன் நுணுக்கம் -32
4. கதழ்வு = விரைவு -17
5. கம்பலை = அரவப் பொருள -51
6. கமம் = நிறைந்து இயலுதல் -57
7. கருவி = தொகுதி -56
8. கலி = அரவப் பொருள -51
9. # கவர்வு = விருப்பு -64

31-40)[ கவவு = அகத்திடுதல் -59

1. கழி = உள்ளது சிறத்தல் -16
2. கழும் = மயக்கம் -53
3. கறுப்பு = வெகுளி -74
4. குரு = நிறன் -5
5. குழ = இளமை -14
6. கூர்(ப்பு) = உள்ளது சிறத்தல் -16
7. கெடவரல் = விளையாட்டு -21
8. கெழு = நிறன் -5
9. சாய் = உள்ளதன் நுணுக்கம் -32

(41-50)[ சாயல் = மென்மை -27 (சாயிறைப் பணைத்தோள்)

1. சிலைத்தல் = இசைப்பொருள் -60
2. சிவப்பு = வெகுளி -74
3. சிறுமை = நோயின் பொருள் -43
4. சீர்த்தி = மிகுபுகழ் -15
5. சும்மை = அரவப் பொருள் -51
6. செல்லல் = இன்னாமை -6
7. செழுமை = வளன், கொழுப்பு -54

Scanned with CamScanner

8. சேர் = திரட்சி -65
9. ஞெமிர்தல் = பரத்தல் -63

(51-60)[ தவ = மிகுதி -3

1. தீர்த்தல் = விடல் -20
2. தீர்தல் -20
3. துய்வு = அறிவின் திரிவு (பித்து) -70
4. துவன்று = நிறைவு -34 (ஆரியர் துவன்றிய பெரிசை இமையம்)
5. துவைத்தல் = இசைப்பொருள் -60
6. துன்னவு = விரைவு -17
7. தெருமரல் = சுழற்சி -13
8. தெவ்வு = பகை -48
9. தெவு = கொளல் பொருட்டு (கொள்ளும் பொருளை உடையது) -47

(61-70)[ நம்பு = நசை -31

1. நன்று = பெரிது -45
2. நனி = மிகுதி -3
3. நாம் = அச்சம் -67
4. நிழத்தல் = உள்ளதன் நுணுக்கம் -32
5. நுணங்கு = நுண்மை -76 (நுணங்கிய கேள்வியர் – திருக்குறள்)
6. நுழைவு = நுண்மை -76 (நுண்மாண் நுழைபுலம்)
7. நொசிவு = நுண்மை -76
8. பசப்பு = நிறன் -10
9. படர் = உள்ளல் -4

71-80)[ படர் = செலவு(செல்லல்) -42

1. பண்ணை = விளையாட்டு -21
2. பயப்பு = பயன் -9
3. பரவு = வழுத்து -84
4. பழிச்சு = வழுத்து -84
5. பழுது = பயனின்மை -26 (பொறி பழுதாயிற்று)
6. பாய்தல் = பரத்தல் -63
7. பிணை = பெட்பு -40
8. புரை = உயர்பு -4
9. புலம்பு = தனிமை -33

(81-90)[ புனிறு = ஈன்றணிமை -77

1. பேண் = பெட்பு -40

Scanned with CamScanner

2. <u>பேம்</u> = அச்சம் -67
3. <u>பையுள்</u> = நோயின் பொருள -43
4. <u>பொற்பு</u> = பொலிவு -37
5. <u>மல்லல்</u> = வளன் -7
6. <u>மழ</u> = இளமை -14
7. <u>மாதர்</u> = காதல் -30 (கனங்குழை மாதர்கொல் = கனங்குழைமேல் காதலோ – திருக்குறள்)
8. <u>மாலை</u> = இயல்பு -15
9. <u>முரஞ்சல்</u> = முதிர்வு -35

(91-100)[ <u>முழுது</u> = எஞ்சாப் பொருட்டு (ஏதும் மிச்சமில்லாத பொருளைத் தருவது) -28 (முழுதும் தருக!)

1. <u>முனைவு</u> = முனிவு -88
2. <u>மேவு</u> = நசை -31
3. <u>யாண்</u> = கவின் -83
4. <u>யாணர்</u> = புதிது -81
5. <u>வம்பு</u> = நிலையின்மை -29
6. <u>வய</u> = வலி(மை) -68
7. <u>வயா</u> = வேட்கைப் பெருக்கம் -73
8. <u>வறிது</u> = சிறிது -38
9. <u>வார்தல்</u> = நெடுமை -19

(101-107)[ <u>வாள்</u> = ஒளி -69

1. <u>விதிர்ப்பு</u> = நடுக்கம் -18 (விதிர்விதிர்த்தான்)
2. <u>வியல்</u> = அகலம் -66
3. <u>வெம்மை</u> = வேண்டல் -36 (அருள் வெய்யோன், பொருள் வெய்யோன்)
4. <u>வெறுப்பு</u> = செறிவு -49
5. <u>வை</u> = கூர்மை -89

## தொல்காப்பியம் எச்சவியல் செய்திகள்

### பொருளடக்கம்

[1செய்யுள் ஈட்டச்சொல்

- 2செய்யுளில் தொடர் அமைதி
- 3சொல், இலக்கணப் பார்வை
  - 3.1தொகைச்சொல்
  - 3.2சொல் வேறு, குறிப்பு வேறு
  - 3.3அடுக்குத்தொடர்
  - 3.4எச்சம்

Scanned with CamScanner

- ○ 3.5மறைக்கும் சொல்
- ○ 3.6மூவிடச்சொல், வரையறை
- 4இலக்கணத்தில் கட்டுப்படாத மொழி வரவு

ப் செய்யுள் ஈட்டச்சொல்[தொகு]

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகியவற்றைச் செய்யுள் ஈட்டிக்கொள்ளும் -1-

இயற்சொல் என்பது செந்தமிழ் நிலத்து வழக்கினை ஒட்டிப் பொருள் பொருள் பயக்கும் -2-

திரிசொல் என்பது 2 வகை -3-

1. ஒருபொருள் குறித்த வேறுசொல்
2. வேறுபொருள் குறித்த ஒருசொல்

திசைச்சொல் செந்தமிழ் சேர்ந்த 12 நிலத்தினும் பொருள்குறிப்பினை உடையவை -4-

வடசொல் என்பது வட-எழுத்தை நீக்கித் தமிழில் எழுதப்படுவது -5-
வடசொல் சிதைந்தும் வரும் -6-

வலித்தல், மெலித்தல், விரித்தல், தொகுத்தல், நீட்டல், குறுக்கல் – ஆகியவை நான்குவகைச் சொல்லிலும் செய்யுளில் நாட்டப்படும் -7-

செய்யுளில் தொடர் அமைதி[

மொழிபுணர் இயல்பு 4 வகை.

நிரல்நிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று என்பன அவை -8-

பெயரிலும், வினையிலும் சொற்களைத் தனித்தனியை நிறுத்திப் பொருள்கொள்ள வைப்பது நிரல்நிறை -9-

ஈரடி எட்டுச் சீர்களில் சொற்களைத் துணித்து வேண்டிய இடத்தில் ஒட்டிக்கொள்ளுமாறு செய்யுள் இயற்றுதல் -10-

சீர்நிலை திரியாமல் அடிகள் இடம்-மாறும்படி அமைத்தல் அடிமறி -11-

அடிமறியில் ஈற்றடியை எங்கு நிறுத்தினும் பொருள் மாறுபடாது -12-

சொற்களை இடம் மாற்றி இணைத்துப் பொருள் கொள்வது மொழிமாற்று -13-

பு சொல், இலக்கணப் பார்வை[

பிரிக்கப்படக் கூடாத பெயர்கள் -14-

Scanned with CamScanner

- தமன், தமள், தமர்
- நமன், நமள், நமர்
- நுமன், நுமள், நுமர்
- எமன், எமள், எமர்

ஒருசொல் அடுக்கு (அடுக்குத்தொடர்) 3 வகை -15-

1. ஏஎஎஎ வம்பன் மொழிந்தனன் – இசைநிறை (செய்யுளில் மட்டும் வரும்)
2. ஒக்கும் ஒக்கும், மற்றோ மற்றோ, - அசைநிலை
3. பாம்பு பாம்பு, தீத்தீ – பொருளொடு புணர்தல்

**தொகைச்சொல்[**

<u>தொகைமொழி</u> 6 வகை -16-

1. வேற்றுமைத்தொகை
2. உவமைத்தொகை
3. வினைத்தொகை
4. பண்புத்தொகை
5. உம்மைத்தொகை
6. அன்மொழித்தொகை

வேற்றுமைத்தொகை -17-

1. நிலம் கடந்தான் (நிலத்தைக் கடந்தான்)
2. தாய் மூவர் (தாயுடன் மூவர்)
3. கருப்புவேலி (கரும்புக்கு வேலி)
4. வரைவீழ் அருவி (வரையிலிருந்து வீழ் அருவி)
5. யானைக்கோடு (யானையது கோடு)
6. குன்றக் கூகை (குன்றின்கண் கூகை)

வினைத்தொகை -18-

1. புலிப் பாய்த்துள் (புலி போலப் பாய்தல்) – வினை-உவமை
2. மழை வண்கை (மழை போல வண்கை) – பயன்-உவமை
3. துடி நடு (துடி போல இடுப்பு) – மெய்-உவமை (வடிவ-உவமை)
4. முத்த முறுவல் (முத்துப் போன்ற சிரிப்பு) – உருவு-உவமை (நிறம்)

வினைத்தொகை -19-

கொல்யானை

பண்புத்தொகை -20-

Scanned with CamScanner

1. கருங்குதிரை - வண்ணம்
2. வட்டப்பலகை – வடிவம்
3. குறுங்கோலு – அளவு
4. தீங்கரும்பு – சுவை
5. தண்ணீர் – அன்ன பிற (குணம்)
6. வேழக்கரும்பு – என்ன கிளவியும் (வேழமாகிய கரும்பு) (ஒரு பொருளைக் குறிக்கும் இருசொல்)

இ உம்மைத்தொகை -21-

1. உவாப் பதினான்கு – இரு பெயர்க்கண் தொக்கது (உவாவும் பதினான்கும்)
2. புலி வில் கெண்டை – பலபெயர்க்கண் தொக்கது (புலியும் வில்லும் கெண்டையும்)
3. தூணிப்பதக்கு – அளவு பற்றித் தொக்கது (தூணியும் பதக்கும்)
4. பதினைந்து - எண்ணியல் பற்றித் தொக்கது (பத்தும் ஐந்தும்)
5. தொடியரை – நிறைப்பெயர்ப் பற்றித் தொக்கது (தொடியும் அரையும்)
6. பன்னிருவர் – எண்ணியற்பெயர் பற்றித் தொக்கது (பதின்மரும் இருவரும்)

அன்மொழித்தொகை -22-

1. வெள்ளாடை வந்தான் – பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை (வெள்ளை ஆடை உடுத்தவன்)
2. தகர்ஞாழல் வந்தாள் – உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை (தகரமும் ஞாழலும் கூந்தலில் பூசிய பெண்)
3. பொற்றாலி வந்தாள் – வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை) (பொன்னாலான தாலி அணிந்தவள்)
4. அறற்கூந்தல் வந்தாள் – உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழிதொகை (ஆற்று அறல் போன்ற கூந்தலை உடையவள்)
5. திரிதாடி வந்தான் – வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை (திரிந்த, திரியும் தாடி உடையவன்)

தொகைச்சொல்லில் பொருள் நிற்குமிடம் -23-

1. வேங்கைப் பூ என்னும்போது இந்தப் பூ வேங்கை என முன்மொழிமேல் பொருள் நின்றது
2. அடைகடல் என்னும்போது பின்மொழிமேல் பொருள் நின்றது (கடல் அடைந்த நிலம்)

Scanned with CamScanner

3. குரைகடல் என்னும்போது குரைத்தல் மேலும், கடல் மேலும் பொருள் நிற்றலால் இத்தொடரில் ஒருமொழிலும் பொருள் நின்றது.
4. அன்மொழித்தொகையில் இருசொல்மீதும் பொருள் நிற்பதில்லை.

தொகைச்சொல் ஒருசொல் நடை கொள்ளும் -24-

உயர்திணையில் வரும் உம்மைத்தொகை பலசொல் நடைத்து. -25-

கபில பரணர் (கபிலரும் பரணரும்)

**ல்லா சொல் வேறு, குறிப்பு வேறு**

குறிப்புரை -26-

1. நான் செல்லும்பொது மலை வந்தது – முள் குத்திற்று – இவை வாரா மரபினை வந்ததாகக் கூறல்.
2. நிலம் வல்லென்றது – நிலத்தின் இயல்பு கெட்டியாதல். இதனை அது செய்த்தாகக் கூறல் ‘என்னா மரபின எனக் கூறுதல்’

**அடுக்குத்தொடர்[**

இசைப்பொருளை நான்குமுறை அடுக்கலாம் -27-

பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ

விரைசொல்லை மூன்றுமுறை அடுக்கலாம் -28-

தீத் தீத் தீ

இரண்டுமுறை அடுக்குவன -29, 30-

- கண்டீரோ கண்டீரோ
- கொண்டீரோ கொண்டீரோ
- சென்றதே சென்றதே
- போயிற்றே போயிற்றே – தொடக்கத்தன.
- கேட்டை கேட்டை
- நின்றை நின்றை
- காத்தை காத்தை
- கண்டை கண்டை

இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனக் காலம் மூன்று
தன்மை முன்னிலை படர்க்கை என இடம் மூன்று
வினைமுற்று, வினைக்குறிப்பு என முற்று இரண்டு -31-

வினைமுற்று இந்த இரண்டு வகையில் அமையும் -32-

அடுக்கும் இந்த இருவகையில் அமையும் -33-

Scanned with CamScanner

1. உண்டான் தின்றான் ஓடினான் பாடினான் வந்தான்.
2. சொல்வலன் சோர்விலன் அஞ்சான்

**மையை எச்சம்|பிரிநிலை எச்சம்**

1. வினையெச்சம்
2. பெயரெச்சம்
3. ஒழியிசை எச்சம்
4. எதிர்மறை எச்சம்
5. உம்-எச்சம்
6. என-எச்சம்
7. சொல்லெச்சம்
8. குறிப்பெச்சம்
9. இசையெச்சம்

பிரிநிலை எச்சம் 2 வகை -35-

1. அவனே வந்தான் – பிரிநிலை எகாரம்
2. அவனோ வந்தான் – பிரிநிலை ஓகாரம்

வினையெச்சம் 2 வகை -36-

1. உழுது வந்தான் – தெரிநிலை வினைமுற்று கொண்டு முடிந்தது
2. உழுது வருதல், உழுது வந்தவன் – குறிப்பு வினைமுற்று கொண்டு முடிந்தது

பெயரெச்சம் பெயர் கொண்டு முடியும் -37-

உண்ணும் சாத்தன், உழுத எருது

ஒழியிசை எச்சம் -38-

- கூரியதோர் வாள்மன் – வாள் ஒழிக்கும் என்னும் இசைப்பு எஞ்சி நின்றது
- வருகதில் கொண்கன் – வரட்டும் பார்த்துக்கொள்கிறேன்
- கொளலோ கொண்டான் – வாங்கியது மட்டுமா செய்தான்

எதிர்மறை எச்சம் -39-

க் யானோ கொண்டேன் – நான் கொள்ளவில்லை என்பது பொருள்.

உம்மை எச்சம் -40-

சாத்தனும் வந்தான் என்றால் கொற்றன் முனபே வந்தான் என்னும் பொருள் தொக்கி நின்றது.

செஞ்சொல் உம்மை எச்சம் -41-

Scanned with CamScanner

உழுது உண்பான் – உழுது சோறு உண்பான் (சோறு என்னும் செஞ்சொல் தொக்கு நின்றது

என என்னும் எச்சம் வினை கொண்டு முடியும் -42-

கொள்ளெனக் கொண்டான்

ஏனைய எச்சங்களுக்கு முடிபு வரையறை இல்லை -43-

குறிப்பு எச்சம் -44-

விண்ணென விசைத்தது வில் – 'விண்' என்பது குறிப்புச்சொல்

சொல்லெச்சம் -45-

பசித்தேன் என்றவழி, பழஞ்சோறு தா என்பது சொல்லெச்சம்.

**மறைக்கும் சொல்**

அவையல் கிளவி (பலர்முன் சொல்லக்கூடாத சொல்) -46-

கால்மேல் நீர் பெய்தும் (= மலம் கழுவு)

மறைக்கும்போது மரூஉச்சொல்லைப் பயன்படுத்துக -47-

ஆட்டுப் பிழுக்கை, ஆப்பீ – இவை மரூஉச்சொற்கள்

z **மூவிடச்சொல், வரையறை**

ஈ, தா, கொடு – இந்த மூன்னறு இரத்தலைக் குறிக்கும் சொற்கள் -48-

தாழ்ந்தவன் உயர்ந்தவனிடம் 'ஈ' என்பான் -49-

ஒத்தவனிடம் 'தா' என்பான் -50-

உயர்ந்தவன் நாழ்ந்தவனிடம் 'கொடு' என்பான் -51-

கொடு என்னும் சொல்லை அவனுக்குக் கொடு என்று படர்க்கைப் பொருளில்தான் பயன்படுத்த வேண்டும். என்றாலும் தனைப் பிறன் பொல் பாவித்துக் கூறும்போது எனக்குக் கொடு என்றும் வரும் -52-

இலக்கணத்தில் கட்டுப்படாத மொழி வரவு[

---

இலக்கணத்தில் கட்டுப்படாத வரவுகள் ஏற்கப்படும் -53-

- பெயர் சூட்டல் – ஓர் எருதை நம்பி என்றும், ஒரு கிளியை நங்கை என்றும் அழைத்தல்
- திசைச்சொல் – ஒருவனைப் புலியான் என்றும், பூசையான் என்னும் வழங்குதல்
- தொன்னெறியான் வரும் பழமொழி – யாற்றுள் செத்த எருமை ஈர்த்தல் ஊர்க் குயவர்க்குக் கடன்
- மெய்ந்நெறி மயக்கம் – சுடுகாட்டை நன்காடு எனல், செத்தாரைத் துஞ்சினார் எனல்

Scanned with CamScanner

- மந்திரம் – திரிதிரி சவாகா, கன்று கொண்டு கறவையும் வந்திக்க சுவாகா (இளம்பூரணர் காட்டு)

செய்யாய் என்னும் முன்னிலைக் கிளவி ஏவலாகவும் வரும் -54-

உண்ணாய்

முன்னிலை ஈறு -55-

ஈ ஈறு – புக்கீ, உண்டீ, உரைத்தீ, சென்றீ

2. மே ஈறு – அட்டிலோளைத் தொட்டனை நின்மே கடிசொல் இல்லை காலத்துப் படினே -56-

சம்பு, சட்டி போன்ற ச-முன்மொழி வரவு

குறைசொற்களை அறிந்து நிறைசொற்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் -57-

- நலா மரை இதழ் புரையும் அஞ் செஞ் சீறடி – தாமரை என்பது மரை என நின்றது – தலைக்குறை
- வெரிநின் ஓதி வெருக் கண்டன்ன – ஓந்தி என்பது ஓதி என நின்றது – இடைக்குறை
- நீல் உண் துகிலிகை கடுப்ப – நீலம் என்பது நீல் என நின்றது – கடைக்குறை

வேற்றுமை உருபு அல்லாத இடைச்செற்களைப் பெயரை வேறுபடுத்தும் வேற்றுமைச்சொல் என்றே கொள்ளுதல் வேண்டும் -58-

உரிச்சொற்களிலும் பொருளை வேறுபடுத்தும் வேற்றுமைச்சொல் உண்டு -59-

வினையெச்சத்தில் திரிபு நிகழும் -60-

- ஞாயிறு பட்டு வந்தான் – ஞாயிறு பட(மறைய) வந்தான் என்பது 'பட' என்னும் 'செய்து' என்னும் எச்சம்
- 'ஏரின் உழாஅர் உழவர் புயல் என்னும் வாரி வளம் குன்றிக்கால்' என்னும் திருக்குறளில் குன்றியக்கால் என்பது குன்றிக்கால் என வந்தது
- கோழி கூவப் பொழுது விடிந்தது – இதில் கூவி என வரவேண்டிய செய்து என்னும் எச்சம் கூவ என, செய என்னும் எச்சமாக வந்தது.
- மோயினள் உயிர்த்தகாலை – இதில் மோயினள் என்பது முற்றெச்சம்

உரையிடத்து உடனிலைப் பொருளை உணர்ந்துகொள்ள வேண்டும் -61-

இந்த நாழிக்கு இந்த நாழி பெரிது

Scanned with CamScanner

சில சொற்களை முன்னத்தால் உணர்ந்தகொள்ள வேண்டும் (முன்னம் = உய்த்துணர்வு) -62-

குழை கொண்டு கோழி எறியும் வாழ்க்கையர் – என்னும்போது செல்வ வளம் மிக்கவர் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஒரு பொருள்மேல் இரண்டு தொடர் வந்தால் வெவ்வேறாகப் பிரித்துப் பார்க்கக் கூடாது -63-

வையைக்கு இறைவன், கூடலர் கோ வந்தான்.

ஒருமை சுட்டிய பெயர் பன்மையை உணர்த்தும் -64-

ஏவல் இளையர் தாய் வயிறு கரிப்ப – இதில் இளையர் என்னும் பன்மை தாய் என்னும் ஒருமையைப் பன்மையாக்கிக் காட்டிற்று.

ஆற்றுப்படை நூலில் ஒருமை பன்மை மயக்கம் நிகழ்வதை ஏற்றுக்கொள்ள வேண்டும் -65-

கலம்பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ [1] (ஒருமை) ... ஒருவிர் ஒருவிர் ஓம்பினிர் கழிமின் [2] (பன்மை)

சொற்களைச் செய்யுளில் வருபவை என்றும், வழக்கில் வருபவை என்றும் பாகுபடுத்தி பிழையின்றி உணர்ந்துகொள்ள வேண்டும் -66-

Scanned with CamScanner